விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka





# வலம்புரி சங்குநாதம்

சங்கு 25
ஒலி 208 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 30 ஞாயிற்றுக்கிழமை (14.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ஒன்பதாம் நாள் அகழ்வு

## 2 மனித எச்சங்களும் சைனட் குப்பியும் மீட்பு

(முல்லைத்தீவு)




முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 9ஆவது நாளான நேற்று 19

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின் 2700 19



### பெரமுனவின் கட்டமைப்பு பலமாகவுள்ளது


# ஜனாதிபதி வேட்பாளரை பீதியடைந்து அறிவிக்கோம்

## நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் கட்சிக் கட்டமைப்பு மிகவும் பலமாகவுள்ளது. ஜனாதிபதி வேட்பாளரை பீதியடைந்து அறிவிக்கமாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)



## வைத்தியர் அர்ச்சுனா இன்று ரணிலை சந்திக்கலாம்?

(யாழ்ப்பாணம்)

வைத்தியர் அர்ச்சுனா இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி 19

### வட்டுக்கோட்டையில்

## 10 போத்தல் கசிப்புடன் பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் பெண்ணொருவர் 10 போத்தல் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றத்தடுப்புப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் 19

## யாழில் சூரிய சக்தி மின்சாரம் வழங்கலில் முறைகேடு!

### அறிக்கை கோரும் ஜனாதிபதி செயலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சூரிய சக்தி மின்னிணைப்பு வழங்கலில் முறைகேடுகள் இடம்பெறுவதாக ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதை அடுத்து குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரிடம் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிராந்திய 19

## யாழில் இசை நிகழ்வில் குழப்பம் விளைவித்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற இசை நிகழ்வில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய பிரபல பாடகர்கள் கலந்து கொண்ட இசைநிகழ்வு நேற்று முன்தினம் இரவு யாழ் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்றது.

தென்னிந்திய பிரபல பாடகர் ஹரிஸ், சுப்பர் சிங்கர் புகழ் ரம்யா, ரேஷ்மா, சௌந்தர்யா, செந் 19

## ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிரான மனு திங்களன்று விசாரணைக்கு

16ஆம் பக்கம் பார்க்க

### மக்களின் வாக்குரிமையைப் பாதுகாத்து

## ஜனநாயகத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

மக்களின் வாக்குரிமையைப் பாதுகாத்து ஜனநாயகத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் 19



### பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக

## வலுவான பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் - ரணில்

(அநுராதபுரம்)

பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக வலுவான பொருளாதார முறைமையொன்று கட்டியெழுப்பப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு வைரவர் கோவிலுக்கு பக்கத்து வீதியில் 1 பரப்புக் காணி(சதுரம்) மலசலகூடம், குழாய்க் கிணறு (நல்ல தண்ணீர்) உடன் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (1444)

**077 574 3271**

## ஆசிரியர் வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு புவியியல், ICT, தமிழ், வரலாறு, குடியுரிமை, கணிதம் ஆகிய பாடங்கள் தரம் 06 - 11 க்கு கற்பிக்கக்கூடியவர்கள் தேவை (C-0783)

**077 087 2903**

## காணி விற்பனைக்கு

Rajeswary Homes PVT LTD

தெல்லிப்பளை நகரை அண்மித்த டச்சு வீதியில் 1 ½ பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட, சீரமைக்கப்பட்ட 20 அடிப்பாதையுடன் 9 காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.

(UDA,பிரதேசசபை அனுமதிபெறப்பட்டது.) (C-789)

தொடர்பு: **077 076 7114**

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,
076 097 3127



SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 138 சர்வதேச நாடுகளில் 70 வருடங்களுக்கு மேலாகவும் இலங்கையில் 37 வருடங்களுக்கு மேலாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணம் மற்றும் அதனுடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி வெற்றிடங்கள்

1. கல்வியியலாளர் - **Educator**
   பெண் - 40 வயதுக்குப்பட்டோர் (தங்கியிருந்து வேலை செய்தல் கட்டாயமானது)
   - உயர்தர (A/L) சித்தி, போதியளவு கணனியறிவு மற்றும் (Diploma or Higher Diploma) கற்கை நெறிச்சான்றிதழ் கொண்டிருப்பதுடன் சிறந்த தொடர்பாடல் திறனையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - பாடசாலைகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணக்கூடியவராகவும், பிள்ளைகளின் கல்வி சார் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து அபிவிருத்தி செய்யக்கூடியவராகவும் இருத்தல் அவசியம்.
   - மோட்டார் வாகன (Motor Cycle) சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
2. இளையோர் மேற்பார்வையாளர் - **Youth Educator**
   (ஆண் - 40 வயதிற்கு உட்பட்டோர்)
   - தங்கியிருந்து வேலை செய்தல் கட்டாயமானது
   - உயர்தர (A/L) சித்தி, போதியளவு கணனியறிவு மற்றும் (Diploma / Higher Diploma) கற்கை நெறிச்சான்றிதழ் கொண்டிருப்பதுடன் சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - விளையாட்டுத்துறை சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
   - வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (மேற்கூறப்பட்ட இரண்டு பதவிகளுக்கும் மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.)
3. குடும்ப வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் - **Family Strengthening Programme Coordinator**
   (ஆண் - 40 வயதிற்கு உட்பட்டோர்)
   - அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது சமூக விஞ்ஞானம் சார்ந்த (Diploma) கற்கைநெறிச் சான்றிதழினை கொண்டிருப்பதுடன் குறைந்தது ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
   - சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
   - சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல் அவசியமாகும்.
4. சிறுவர் பராமரிப்பாளர் கற்கைநெறிக்கான பயிற்றுவிப்பாளர் - **Instructor - Child Care Giver**
   - அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றில் பட்டதாரி / துறைசார் தகைமை NVQ Level (V) / அதற்கு மேலதிகமான தகைமையினை கொண்டிருத்தல் அவசியம்.
   - TVEC தரநிலைகளில் பரீட்சயமானதோடு அத்துறை சார்ந்த அனைத்து தகைமைகளையும் கொண்டிருப்பதுடன் கற்பித்தல் ஆற்றல் மற்றும் குறைந்தது 01 வருட முன் அனுபவத்தையும் கொண்டிருத்தல் அவசியமாகும்.
   - கணனி மற்றும் ஆங்கில மொழியறிவினைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
5. கணக்கு உதவியாளர் - **Accounts Assistant**
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் HNDA தகைமை அல்லது AAT கற்கைநெறிச் சான்றிதழ் ஒன்றினைக் கொண்டு இருத்தல் வேண்டும்.
   - இரண்டு வருடம் / அதற்கு மேற்பட்ட காலம் கணக்காளராக பணிபுரிந்த அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு தங்கள் சுயவிபரக்கோவையை 22.07.2024 இற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். **இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.**

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."

தொடர்புகளுக்கு: **எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,**
இல:219, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2211101, 0773733711
மின்னஞ்சல்: careers@soscvsrilanka.org (C-0786)



## வீடு வாடகைக்கு

தாவடிச் சந்திக்கு அருகாமையில் மாபிள் பதித்த வீடு வாடகைக்குண்டு. (155)

**076 570 4141**

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரிப்பதற்கு, வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணியாளர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (156)

**078 731 1049**
**070 467 4672**

## யாழ்ப்பாணத்தில் இசைக்குழுவுக்கான கலைஞர்கள் தேவை

1. கீபோட்
2. ஒக்டபாட்
3. தபேலா
4. மிருதங்கம்
5. எலக்ரோனிக் ட்ரம்
6. பாடகர்கள்
7. பாடகிகள்

(1464)

எஸ். குணா - யாழ் நகர்

**077 908 6737**

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்

சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK - 1300/= | French - 1990/= |
| Canada - 2400/= | Germany - 1990/= |
| Australia - 2300/= | USA - 2400/= |

மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை (1477)

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6.

**077 755 4528**

## நெல் கொள்வனவு செய்யப்படும்

ஈக்கு நெல், 406 போன்ற நெல் வகைகள் கொள்வனவு செய்யப்படும். இருப்பவர்கள் தொடர்புகொள்ளவும். (159)

தொடர்பு: **077 978 9223**


## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 06 - 01 - 1955



இறைவன் அடியில் 11 - 07 - 2024 (1452)

### உயர்திரு. சிதம்பரப்பிள்ளை கெங்காதரன்

(ஓய்வுநிலை இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்- Spo)

கிழவிதோட்டம் கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பற்பை வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கெங்காதரன் அவர்கள் (11.07.2024) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிகளின் கனிஸ்ட மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னமுத்து (மலாயன் பென்சினியர்) தம்பதிகளின் மருமகனும் கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்(ஓய்வு பெற்ற அதிபர்), கந்தசாமி, மயில்வாகனம்(இ.மி.ச ஊழியர்), இலட்சுமி, நமசிவாயம்(அஞ்சல் அலுவலக ஊழியர்), மனோன்மணி மற்றும் சண்முகம்(இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர்), சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரனும் நடராசா நவஜீவனின் மாமனாரும்(லண்டன்) நவஜீவன் ஆர்த்திகா(லண்டன்), இராகவி ஆகியோரின் பெரிய தந்தையும் நிவினின் பேரனாரும் காலஞ் சென்றவர்களான திரு, திருமதி கனாகாம்பிகை ராமேஸ்வரன் அவர்களின் பாசமிகு மைத்துனரும் கலைவதனி, சரவணபவன், கலைச்செல்வி, ஞானசம்பந்தன், பிரதீபா, தயாளினி, விஜிதா, தயாநிதி, லதாநிதி, குமரேசன், நந்தகுமார்(அமரர்), உதயகுமார், தணிகாசலம், கிருபாகரன் ஆகியோரின் சிறிய தந்தையும் தாட்ஷாயினி, சுபாசினி, நிஷாந்தினி, துஸ்யந்தன், வாசுகி, சிவதாசன்(அமரர்), ஜெகதீசன்(அமரர்) குகதாசன், ஜெயந்தன், சபேசன், துஸ்யந்தன், வாசுகி, நல்லைநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை(14.07.2024) காலை 7 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 8.30 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"பற்பை நிலவு"
வதிரி, கரவெட்டி. (C-784)

தகவல்: குடும்பத்தினர்
077 618 4795

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தடை வரினும் தேர்தல் நடக்கும்

## அநுரகுமார உறுதி

(கொழும்பு)

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த விதமான முட்டுக்கட்டை போட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடந்தே தீரும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.**



அநுரகுமார பிராந்தியத்தின் வர்த்தக பிரமுகர்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காரைதீவில் சந்தித்து பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டு மக்கள் காலம் காலமாக தொடர்ந்து நாட்டையும் மக்களையும் அழித்து வருபவர்களுக்கே வாக்குகளை வழங்கி வந்திருக்கின்றார்கள். இதனால் தான் நாடு அனைத்து விதங்களிலும் கெட்டு குட்டிச்சுவராகி இருக்கிறது.

இனவாதிகளும் ஊழல்வாதிகளும் இந்நாட்டை ஆண்டதால்தான் நாட்டில் இனவாதம் மேலோங்கி பொருளாதாரம் சீரழிந்து அனைத்து விதத்திலும் நாடு பின்னடைந்து காணப்படுகிறது.

இனவாதத்தை முதலீடாக பயன்படுத்தி ஆட்சி நடத்திய ராஜபக்ஷக்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. ரணில் விக்கிரமசிங்கவாலும் முடியாது.

ரணில் அரசாங்கத்திடம் இருந்து மதுபான விற்பனை சாலை அனுமதிப்பத்திரம் பெற்ற எம்.பிக்கள் சஜித்துடன் உள்ளனர். இதை சஜித் மறுப்பாரா.

ரணில் விக்கிரமசிங்க என்ன முடிச்சுகளை போட்டாலும் அடுத்த இரண்டரை மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதி தேர்தல் நடந்தே தீரும்.

இத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மகத்தான வெற்றியை பெற்று அதன் மூலமாக எமது நாட்டு மக்கள் விரும்புகின்ற மக்கள் ஆட்சி நிச்சயம் மலரும். எமது ஆட்சியில் இனவாதம் இருக்காது. பொருளாதார மாட்சி ஏற்படும். எமது மக்களுக்கு மீட்சி ஏற்படும்.

தென்னிலங்கை மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றித்து நிற்கின்றனர். அதே போல தேசிய மக்கள் சக்தி மூலமாக மக்கள் ஆட்சி உருவாக்கப்படுவதில் கிழக்கு மக்களும் பங்காளிகளாக இணைய வேண்டும்.

மாற்றுத்துக்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம். இலங்கையர்களாக நாம் அனைவரும் வாழ்வோம். புதிய தேசத்தை கட்டியெழுப்புவோம் என அவர் தெரிவித்தார். (நி)

# வேதன கோரிக்கையை ஏற்காதோருக்கு வேதன உயர்வு வழங்க தீர்மானம்

## தடுக்க சட்ட நிறுவனங்களுடன் ஆராய்வு



(கொழும்பு)

ஜூலை 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் பணிக்குச் சமுகமளித்த அரச ஊழியர்களுக்கு வேதன அதிகரிப்பு வழங்கப்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முழு அரச சேவையினரின் வேதன கோரிக்கையை ஏற்காமல் பணிக்குச் சமுகமளித்த ஒரு சிலருக்கு மட்டுமே வேதன உயர்வை வழங்குவதற்கான தீர்மானத்தைத் தடுக்க சட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு 800 மில்லியன் தேவை

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு 600 - 800 மில்லியன் ரூபாய் வரை தேவைப்படுவதாக, அச்சகத்தின் தலைவர் கங்கா கல்பானி லியனகே தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி வாக்குச் சீட்டின் அளவைப் பொறுத்து இந்த தொகை குறைக்கப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தத் தேர்தல் தொடர்பான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆவணங்கள் இதுவரை அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மனச்சாட்சிப்படி நடவுங்கள் ஆசிரியர்களுக்கு வலியுறுத்து

(கொழும்பு)

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக இந்த நாட்டில் கல்வித் துறையில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார் தெரிவித்துள்ளார்.

வருங்கால சந்ததியை உருவாக்கும் கௌரவமான சேவையாக ஆசிரியர்களுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால், ஆசிரியர்கள் அனைவரும் அதனை சரியாக புரிந்துகொண்டு மனசாட்சிப்படி செயற்படுமாறு இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு, ஐநூறுக்கும் மேற்பட்ட கொரிய, ஜேர்மன், பிரெஞ்சு, ஹிந்தி, சீன மற்றும் ஜப்பானிய மொழி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த நாட்டில் உள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்ற எண்ணியுள்ளோம். அந்தப் பல்கலைக்கழகங்களில் இருந்து 4 வருடங்களின் பின்னர் பட்டதாரி ஆசிரியர்கள் உருவாகுவார்கள்.

இதன் மூலம் தற்போது கல்வியியல் கல்லூரிகளில் இணையும் 5,000 மாணவர்களின் எண்ணிக்கையை



7,500 ஆக அதிகரிக்க முடியும்

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் 7500 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ச்சி பெறுவார்கள்.

மேலும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக பாடசாலைகளில் உள்ள வசதிகளை மேலும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவர்களுக்கு பயிற்றுவிக்க, பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளதால் அதனை புரிந்து கொண்டு மனச்சாட்சிப்படி செயற்பட வேண்டும்.

இந்தப் பணிப் பகிஷ்ரிப்புகள் தொடர்ந்தால் தொழிற்சங்கங்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என்பதை அவர்கள் தற்போது உணர்ந்துள்ளதாகவும் கல்வி இராஜங்க அமைச்சர் அரவிந்த் குமார் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சை முடிவுகளை பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் 2019, 2020, 2021, 2022 (2023) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பரீட்சைகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன


இதேவேளை பரீட்சை முடிவுகள் நிகழ்நிலையில் வெளியிடப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk ஆகிய இணையத்தளங்களுக்குள் பிரவேசித்து பெறுபேறுகளை பார்வையிட முடியும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மின்னுமா' மெஸியின் ஆர்ஜென்ரினா

## பரபரப்பான கோபா பைனலில் கொலம்பியாவுடன் இன்று மோதல்



"கோபா அமெரிக்கா" கால்பந்து பைனலில் ஆர்ஜென்ரீனா - கொலம்பியா அணிகள் மோதுகின்றன.

அமெரிக்காவில், "கோபா அமெரிக்கா" கால்பந்து 48வது சீசன் நடக்கிறது. மயாமியில் இன்று (அதிகாலை 5:30 மணி) நடக்கவுள்ள பைனலில் உலகின் "நம்பர்-1" ஆர்ஜென்ரீனா அணி, 12ஆவது இடத்தில் உள்ள கொலம்பியாவை எதிர்கொள்கிறது.

"ஏ" பிரிவு லீக் சுற்றில் 100 சதவீத வெற்றி கண்ட ஆர்ஜென்ரீனா, காலிறுதியில் ஈகுவடோர், அரையிறுதியில் கனடாவை வீழ்த்தி பைனலுக்கு முன்னேறியது. லவ்டரோ மார்டினஸ் (4 கோல்), ஜூலியன் ஆல்வரஸ் (2), மெஸி, லிசான்ட்ரோ மார்டினஸ் (தலா ஒரு கோல்) கைகொடுத்தால் 16வது முறையாக கிண்ணம் வெல்லலாம். இதன்மூலம் இத்தொடரில் அதிக முறை கிண்ணம் வென்ற அணிகளுக்கான வரிசையில் உருகுவேயை (15) முந்தி முதலிடம் பிடிக்கலாம்.

"டி" பிரிவில் தோல்வியை சந்திக்காத (2 வெற்றி, ஒரு "சமன்") கொலம்பிய அணி, காலிறுதியில் பனாமா, அரையிறுதியில் உருகுவேயை வீழ்த்தி பைனலுக்கு முன்னேறியது. இன்று ஆர்ஜென்ரீனாவைச் சமாளிக்கும் பட்சத்தில் 23 ஆண்டுகளுக்குப் பின் கொலம்பிய அணி "கோபா அமெரிக்கா" கிண்ணம் வெல்லலாம். கடைசியாக 2001ல் சம்பியன் பட்டம் வென்றிருந்தது. (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.இரத்தினசிங்கம் கௌரிகாந்தன்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக 12.07.2024 அன்று யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ். சதீஸ்கரன் அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று வாழ உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

Congratulations

திரு.திருமதி கௌரிவாசன் திவ்யா குடும்பம்
திரு.திருமதி ஜெயபாலன் சிவகவிதா குடும்பம்
திரு.திருமதி முருகதாசன் நளினி குடும்பம்

(C-791)

## மகளிருக்கான பயிற்சிகள்

கிழமை நாள் அல்லது சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன!!!

* ICING (ஐசிங்) * SUGAR FLOWERS * COOKERY
* HAIR DRESSING * BEAUTICIAN COURSES

● பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தல்

உடை தயாரித்தல் பயிற்சிகள்

☞ மேற்குறித்த பயிற்சிகளுக்கு தேவையான துணி மற்றும் பொருட்கள் தாமே கொண்டு வருதல் வேண்டும்.


இடம் :- யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி,
(யாழ் போதனா வைத்தியசாலை பின்வீதி)

தொடர்புகளுக்கு :-
077 711 0383
074 217 0383
(Whatsapp No)

(C-788)


## மரண அறிவித்தல்

பிறப்பு 18 - 05 - 1938



இறப்பு 12 - 07 - 2024

### இராசையா பத்மநாதன் (SO)

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர் - பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

இல.314, கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த இராசையா பத்மநாதன் அவர்கள் 12.07.2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகனும் மற்றும் பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சீதாலட்சுமி மற்றும் மீனலோசனி, கருணாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல் : குடும்பத்தினர்

தொ.பே : 077 857 [illegible]

(1476)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமிஐயர் மனோரஞ்சிதமணி



பிறப்பு - 26.06.1931 | உதிர்வு - 13.07.2024

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் செல்வச்சந்நிதி கோவிலடி தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமிஐயர் மனோரஞ்சிதமணி அவர்கள் நேற்று (13.07.2024) காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.திருமதி கந்தசாமி - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் சங்கரப்பிள்ளைஐயர் கந்தசாமி ஐயர் அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான க.உலககுருநாதஐயர், சரவணபவநாதன், சிவகுருநாதன், கேசவநாதன், சடாச்சரநாதன், பஞ்சாச்சரநாதன், சற்குருநாதன் ஆகியோரினதும் பஞ்சாட்சரதேவி (இந்தியா), கௌரி ஆகியோரின் தாயாரும் புஸ்பராணி, காலஞ்சென்ற வனிதாமணி, மல்லிகாதேவி, காலஞ்சென்ற மகேந்திரன், மகேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் ஜயந்தி, விஜிதா, வனிதா, இரமணன், இராகவன், கார்த்தி, தேசிகன், ஜனனி, தாரணி, நவரஞ்சிதமணி, சர்வேஸ்வரன் ஆகியோரின் அப்பம்மாவும் கஸ்தூரி, சுரேந்திரன், கஜேந்திரன், குகேந்திரன், காயத்திரி, மனோரஞ்சனி, வெங்கடேஸ்வரன் ஆகியோரின் அம்மம்மாவும் துவாரகன், சுபானு, சங்கவி, இலக்கியா, கிருத்திகன், கீர்த்தனன், பிரணவன், காயத்திரி, மதியுகன், தர்ஷனா, தனஞ்செயன், ஆரபி, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரினது இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2024) காலை 11 மணியளவில் மெத்தைவீட்டுக்கந்தசாமிஐயர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் காட்டுப்புலம் தொண்டைமானாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

தொ.பே : 077 321 7265, 077 8037 866

(158)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக புகையை வெளியிடும் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில்

.(கொழும்பு)


அதிக புகையை வெளியிடும் வாகனங்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன உமிழ்வு பரிசோதனை அறக்கட்டளை நிதியத்தின் பணிப்பாளர் தகன் கமகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் வீதியில் பயணிக்கும் இவ்வாறான வாகனங்கள் தொடர்பில் 070 3500 525 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு முறைப்பாடுகளை அனுப்பச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் புகைச்சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளதுடன் போலியான தந்திரோபாயங்கள் மூலம் புகை பரிசோதனை சான்றிதழைப் பலர் பெறுகின்ற போதிலும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்கள அதி காரிகள் வீதியில் வாகனங்கள் செலுத்தும் போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதிக புகை வெளியேறுவதை அவதானிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராக பராமரிப்பு உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் இல்லையெனில் வாகனத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# ரிஷாத் பயணித்த கார் விபத்தில் சிக்கியது



(புத்தளம்)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பயணித்த கார் புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

துவிச்சக்கரவண்டியொன்று திடீரென வீதியில் பிரவேசித்தபோது முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பயணித்த கார் சற்றே விலக முற்பட்டுள்ளது. அவ்வேளையில் கார் வீதியை விட்டு விலகிச் சென்றதால் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் கார் சிறியளவில் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

**DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615 6719

Western Union WU MoneyGram. Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974

(145)


# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 11 . 1942



மறைவு 11 . 07 . 2024

## அமரர் சின்னத்துரை வெற்றிவேலு

வட்டு.வடக்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வட்டு.மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்துரை வெற்றிவேலு (ஓய்வு பெற்ற தபாற் திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்/ கணக்குப் பரிசோதகர்) அவர்கள் 11.07.2024 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதிகளின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி வரதலட்சுமியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தரூபியின் அன்புக் கணவரும், இளங்குமரன், அருள்குமரன், பூரணி, சாயிப்பிரதாயினி, திருக்குமரன், பரணீதரன், வரதிதாசன், சாந்தரூபன், வெங்கடேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.07.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. (1470)

தகவல் : குடும்பத்தினர்

# இராசிபலன்

14.07.2024
ஆனி 30, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி பிற்பகல் 3.45 மணிவரை

சித்திரை முன்னிரவு 9.06 மணிவரை
சுபநேரம் 9.00-10.30 மணிவரை
இராகுகாலம் 4.30-6.00 மணிவரை

அட்டமி நவமி
சந்திராஷ்டமம் - அவிட்டம், சதயம்

வளவன்



**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.



**ரிஷபம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.



**மிதுனம்**: பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.



**கடகம்**: பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான நாள்.



**சிம்மம்**: ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.



**கன்னி**: சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.



**துலாம்**: உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.



**விருச்சிகம்**: எடுத்த காரியத்தை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**தனுசு**: நினைத்தது நிறைவேறி திருப்தி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.



**மகரம்**: சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்.



**கும்பம்**: பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உடல் நலன் சீராகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.



**மீனம்**: பயணங்களின் போது கூடுதல் விழிப்புணர்வு அவசியம், சேமிப்பில் சிறிது கரையலாம், வரவும் செலவும் சமமாகும், குடும்பத்தில் சிறுசிறு விவாதங்கள் தோன்றி மறையும்.

**நாம் பலவீனர்களாக இருக்கிறோம் அதனால்தான் துன்பப்படுகின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் திடீரென தீப்பற்றி எரிந்த ஆட்டோ



(கரணவாய்)

யாழ் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று மதியம் 1 மணியளவில் முச்சக்கர வண்டி ஒன்று தீடீரென தீப்பற்றியுள்ளது.

நெல்லியடி பகுதியில் உள்ள ஏரிபொருள் நிரப்பு நிலையத்தில் குறித்த முச்சக்கர வண்டிக்கு பெற்றோல் நிரப்பப்பட்டுச் சென்று கொண்டிருந்த போதே யாழ் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு முன்பாக முச்சக்கரவண்டி தீப்பற்றியுள்ளது.

இந்நிலையில் முச்சக்கர வண்டி சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளதுடன் குறித்த முச்சக்கரவண்டி முற்றாக எரிந்துள்ளது.

முச்சக்கரவண்டியின் பெற்றோல் நிரப்பு கலன் ஊடான ஒழுக்கினால் திடீரென தீப்பற்றி இருக்கலாம் என தெரியவருகின்றது.இது தொடர்பாக மேலதிக விசாரணைகளினை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(நி-60)

# மாணவர்களுக்கான உதவித்தொகை யாழில் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

முதலாம் தரம் முதல் 13 ஆம் தரம் வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் களுக்கு ஜனாதிபதி நிதி யத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உத வித்தொகையை வழங்கும் யாழ்.மாவட்டத்திற்கான நிகழ்வு நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தந்தை செல்வா மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதியால் நேற்று முதல் நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட குறித்த திட்டமானது 25 மாவட்டங்களிலும் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வழங்கப்பட்டதுடன் இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று வழங்கப்படவுள்ளது. (நி-33)

## மந்துவில் கிழக்கில்

# வயோதிபரை தாக்கிய பெண்ணொருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம்-மந்துவில் கிழக்கு பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் நேற்று சனிக்கிழமை பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உறவுக்கார வயோதிபப் பெண் ஒருவரை முரட்டுத்தனமாக தடியால் தாக்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையில் மேற்படி பெண்கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே பொலிஸார் தாக்கிய பெண்ணை கைது செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-30-33)

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்னெடுக்கப்பட்டது

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலையின் முன்றலில் ஈகைச்சுடரேற்றி மலரஞ் சலி செலுத்தப்பட்டதோடு திருவுருவச்சிலைக்கு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.

நினைவேந்தலில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி-33)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந் துள்ள வண்ணார் பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி எற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்று கொள்ளுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 15.07.2024 | மு.ப-9-11 | பிறவுண் றோட் கலட்டி வீதி |
| | மு.ப-11- 1 | மெதடிஸ்த மிசன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதி |
| | பி.ப-2.30-4 | சபாபதி ஒழுங்கை தலையாழி வைரவர் கோவில் வீதி |
| 16.07.2024 | மு.ப-9-11 | தாமரை வீதி முருகன் கோவிலடி |
| | மு.ப-11- 1 | பெரியம்பிரான் வீதி வெற்றிமாதா கோவிலடி |
| | பி.ப-2.30-4 | வள்ளுவன் சனசமூக நிலையம் |
| 17.07.2024 | மு.ப-9-11 | வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கை |
| | மு.ப-11- 1 | ஆரோக்கிய மாதா கோவிலடி கஸ்தூரியார் வீதி |
| | பி.ப-2.30-4 | கனகசபை வீதி |
| 18.07.2024 | மு.ப-9-11 | சைவ பரிபாலன சபை நீராவியடி |
| | மு.ப-11- 1 | பிறவுண் வீதி 1ஆம் ஒழுங்கை |
| | பி.ப-2.30-4 | சிவகுருநாதர் வீதி ஓட்டுமடம் |
| 19.07.2024 | மு.ப-9-11 | ஞானக்குழந்தை பாலர் பாடசலை அரசடி வீதி |
| | மு.ப-11- 1 | பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை |
| | பி.ப-2.30-4 | அன்னசத்திர லேன் நாவலர் வீதி |
| 22.07.2024 | மு.ப-9-11 | பலாலி வீதி 4ஆம் ஒழுங்கை |
| | மு.ப-11- 1 | குமாரசாமி வீதி ஆச்சிரமம் |
| | பி.ப-2.30-4 | ஆத்திசூடி சனசமூக நிலையம் |
| 23.07.2024 | மு.ப-9-11 | ஐயனார் கோவிலடி வண்ணை வைத்தியசாலை முன்பாக |
| | மு.ப-11- 1 | இளையதம்பி பாடசாலை முன்பாக |
| | பி.ப-2.30-4 | கலைவாணி சனசமூக நிலையம் ஓட்டுமடம் |
| 24.07.2024 | மு.ப-9-11 | முருகமூர்த்தி வீதி ஐங்கரன் சனசமூக நிலையம் |
| | மு.ப-11- 1 | கே.கே.எஸ் வீதி கலைவாணி முன்பாக |
| | பி.ப-2.30-4 | பூநாறி ஒழுங்கை காரைக்கட்டு சந்தி |
| 25.07.2024 | மு.ப-9-11 | மிலேனியம் லேன் இராமநாதன் வீதி |
| | மு.ப-11- 1 | நாவலடி |
| | பி.ப-2.30-4 | நடமாடும் சேவை கலட்டிச்சந்தி |

(நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 270 | 340 | 250 | 300 | 350 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 | 300-400 | 450 |
| தக்காளி | 350 | 350 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 170 | 150 | 120 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 250 | 350 |
| கரட் | 400 | 500 | 480 | 350 | 450 |
| பூசணி | 170 | 200 | 200 | 150 | 200 |
| புடோல் | 170 | 250 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 160-200 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 450 | 400 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 250 | 230 | 200 |
| பாகற்காய் | 800 | 700 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 260 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 450 | 300 | 400-600 | 400 |
| லீக்ஸ் | 550 | 400 | 500 | 360 | 450 |
| பீற்றூட் | 400 | 500 | 550 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 700 | 400 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 1000 | 500-600 | 1000 |
| போஞ்சி | 800 | 750 | 600 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | — | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 60 | 50 |
| தேசிக்காய் | 800 | 700 | 1000 | 600-650 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 70 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 450 | — | 480 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | — | 450 |
| முள்ளங்கி | 120 | 150 | 150 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 120 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 450

Viber 076 636 3378



# காலம் கடந்தபின் வரும் ஞானம்

## இழந்தவற்றை மீட்டுத் தராது



> இந்த சிந்தனை ஆட்சியாளர்களுக்கு இற்றைக்கு மூன்று தசாப்தத்திற்கு முன் தோன்றியிருந்தால் இலங்கையில் இரத்த ஆறு ஓடியிருக்காது. பொருளாதாரத்தில் இலங்கை உச்சத்தில் இருந்திருக்கும். தற்போதைய சிங்கப்பூரை விட பத்து மடங்கு வளர்ந்து, ஏழை நாடுகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து வாழ்வளிக்கும் நாடாக மலர்ந்திருக்கும்.

நாடு எக்கேடு கெட்டுப் போனால் என்ன நாம் பதவியில் இருக்க வேண்டும். அந்தப் பதவியினூடே நாம் நினைத்ததை நடத்தி முடிக்க வேண்டும் எனும் கீழ்மைத்தனமான எண்ணம் கொண்டவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தால் அந்த நாடு எக்கேடு கெடும் என்பதற்கு இலங்கைத் திருநாடு நல்லதொரு உதாரணம்.

இதை நாம் இங்கு கூறும் போது பலருக்கு கோபம் பொத்திக் கொண்டு வரும். வந்து என்ன செய்ய முடியும். அதுதான் நிறுதிட்டமான உண்மை.

வளர்ச்சிப் போக்கில் எப்படி இருக்க வேண்டிய நாடு இப்போது கந்தறுந்து காவடி எடுக்கிறது என்றால் அதற்கான முழுப்பொறுப்பையும் ஆட்சியாளர்களே ஏற்க வேண்டும்.

தமது அரசியல் ஆதாயத்துக்காக இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் பிரிவினைகளை ஏற்படுத்தி அந்த நெருப்பில் குளிர் காய்ந்தது மட்டுமன்றி நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்து விட்டு மீண்டும் மீண்டும் ஆட்சி அதிகாரங்களில் இருக்க வேண்டும் என ஆசை கொள்வது மக்களை முட்டாள்கள் ஆக்கும் செயல்.

தாம் ஆட்சி அதிகாரங்களில் இருக்க வேண்டும் என்பதற்கு இவர்கள் பயன்படுத்தும் ஆயுதம் இன-மத வாதம்.

இதைப்புரிந்து கொள்ளாத மக்களும் அவர்களுக்கு ஆணை வழங்கி விட அவர்களின் அட்டகாசம் அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் என்ன முன்விரோதம் இருக்கிறது? ஏன் அவர்களுக்குள் முரண் ஏற்பட்டது? என்பதை நாம் ஆராய்ந்தால் அதில் இன-மத வாத சிந்தனைகளைத் தூண்டுவதனூடாக தமது அரசாட்சியைத் தக்கவைக்கும் செயலாகவே இருக்கும்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட்டிருந்தால் நாடு இன்று இந்தநிலையில் இருந்திருக்காது.

அதிகாரப் பிரிப்புக்கள் அனைத்தும் ஓர் இனத்தைச் சார்ந்து இருந்ததுடன் சிறுபாண்மை இனத்தவரின் உரிமைகள் மறுக்கப்பட்டதனால் எழுந்த சலசலப்பு இன்று முள்ளிவாய்க்கால் வரை சென்று முடிந்திருக்கிறது.

இந்த முடிவில் கூட சிறுபாண்மைத் தமிழ் இனம் அழிக்கப்பட்டதான வரலாறே பதியப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட போர் அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்துக் கொன்றொழிக்கும் போராகவே மாறியிருந்தது.

இந்தக் கொடும் போரில் வார்த்தைகளினால் விபரிக்க முடியாத துன்பத் தையும் இழப்புக்களையும் தமிழினம் அனு பவித்தது என்ற உண்மையை ஆட்சியாளர்கள் குழிதோண்டிப் புதைக்க முற்படுவது ஒரு நாளும் ஏற்புடையதல்ல.

இலங்கையில் நடந்தது இன அழிப்பு. இலங்கையில் இறுதிப் போரில் போர்க்குற்ற மீறல்கள் நடைபெற்றன என்பதற்கான பலமான ஆதாரங்கள் சர்வதேச அரங்கில் வெளியாகியிருந்த போதிலும் அதற்கான விசாரணைகளோ நீதியைப் பெற்றுத்தரும் முயற்சியோ சர்வதேசத்தினால் முன்னெடுக்கவில்லை என்பது வேதனையான விடயம்.

இதில் சிறுபாண்மைத் தமிழினத்தின் பிரதிநிதிகளை வைத்து போர்க்குற்ற மீறல்களுக்கான விசாரணைகள் முடிந்து விட்டன என அறிக்கையிடச் செய்யும் கயமத்தனங்களை அரசாங்கம் இன்றுவரை நடத்திக் கொண்டு தான் இருக்கின்றது.

வலியை அனுபவித்தவருக்கே வலியின் கொடுமை புரியும். வாழ்நாள் முழுவதையும் குளிரூட்டப்பட்ட அறையில் கழித்தவர்களுக்கு வலி என்றால் என்ன என்று எப்படி புரியும்.

ஆனால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவர்களுக்கே எமது அதிகார மீட்பர் என்ற அடைமொழியைச் சூட்டியிருக்கின்றோம் என்றால் இதை விட மடமைத்தனம் வேறு ஏதுவாக இருக்க முடியும்.

நிலை இதுவாக இருக்கையில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.

அதாவது, இனவாத-மதவாதக் கட்சிகள் இருக்கும் வரை ஜனநாயகம் தலைதூக்காது எனத் தெரிவித்திருந்தார்.

மதத்தீவிரவாதத்தைத் தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த தனிநபர் பிரேரணைக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தமுறைமையை பிரித்தானியர்கள் எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். தேர்தல் முறையை மாற்றப்பட வேண்டும். இன-மத வாதக் கட்சிகள் இருக்கும் வரை நாட்டில் ஜனநாயகம் ஒரு நாளும் தலைதூக்காது என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்த உண்மையை ஆட்சியாளர்கள் கண்டறிய பிரித்தானியர்கள் விட்டு சென்று 76 ஆண்டுகள் ஆகியிருக்கிறது என நினைக்கும் போது வேதனை மேலோங்கி நிற்கிறது.

இந்த சிந்தனை ஆட்சியாளர்களுக்கு இற்றைக்கு மூன்று தசாப்தத்திற்கு முன் தோன்றியிருந்தால் இலங்கையில் இரத்த ஆறு ஓடியிருக்காது. பொருளாதாரத்தில் இலங்கை உச்சத்தில் இருந்திருக்கும். தற்போதைய சிங்கப்பூரை விட பத்து மடங்கு வளர்ந்து, ஏழை நாடுகளுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து வாழ்வளிக்கும் நாடாக மலர்ந்திருக்கும்.

என்ன செய்ய தலைக்குமேல் வெள்ளம்வந்து அனைத்தையும் அடித்துச் சென்ற பின்; சாண் ஏறிவிட்டது, முழம் ஏறி விட்டது என்று ஒப்பாரி வைப்பதில் பயன் என்ன?

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண ரகசியங்கள்...!



நாம் அனைவரும் பணக்காரர் (Rich) ஆக விரும்புகிறோம். ஆனால், உண்மையில் பணக்காரர் ஆவது எப்படி என்பது தெரியாமலே ஏதேதோ செய்து, குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க நினைத்து, ஏமாறுகிறார்கள். ஆனால், பணக்காரர் ஆவதற்கு சில எளிமையான வழிகளைக் கடைப்பிடித்தாலே போதும். அந்த வழிகள் இன்றைக்கும் ரகசியமாகவே இருக்கின்றன. அவற்றைப் பற்றி பார்ப்போம்.

**சம்பாத்தியம் முக்கியம் அல்ல...**

ஒருவர் உண்மையிலேயே பணக்காரர் ஆக சம்பாத்தியம் மற்றும் சம்பளம் முக்கியமில்லை. அவர் சம்பாத்தியத்தில் எவ்வளவு தொகையை சேமிப்பு மற்றும் முதலீடு என்பதுதான் முக்கியமாகும். ஒருவர் தன்னுடைய சம்பாத்தியத்தில் எந்த அளவுக்கு அதிகமாக சேமித்து முதலீடு செய்கிறாரோ, அந்த அளவுக்கு விரைவாக அவர் பணக்காரர் ஆவார்.

**நேரத்தை சரியாகப் பயன்படுத்துவார்கள்...**

பணக்காரர்கள் தங்களின் நேரத்தை சரியாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் ஒருபோதும் குறுக்கு வழியில் பணக்காரராக விரும்புவதில்லை. அவர்கள், காணிகளோ, தங்கமோ மலிவாகக் கிடைக்கும் போது அதிகமாக வாங்கிப் போடுவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், நீண்ட காலத்துக்கு சரியான விலை வரும் வரை காத்திருக்கிறார்கள். பங்குச் சந்தையில் நேரம் பார்த்து முதலீடு செய்வதைவிட, முதலீடு செய்துவிட்டு நீண்ட காலத்துக்கு காத்திருப்பது மூலமே கணிசமான லாபத்தைப் பார்க்க முடியும்.

**எழுத்தில் நிதி இலக்குகள்...**

இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என மனதில் நினைப்பதைவிட, அதைக் காகிதத்தில் அல்லது கம்ப்யூட்டரில் எழுதி வைத்து செயற்படுத்துவதன் மூலம் அந்த நிதி இலக்குகள் நிச்சயம் நிறைவேறும். இப்படி இலக்குகளை எழுதி வைத்து குறிப்பிட்ட இடைவெளியில் அதைத் திரும்பத் திரும்ப பார்க்கும்போது, அதை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்கிற உத்வேகம் வரும். இதனால், இலக்குகளை எழுதி வைக்கும் பணக்காரர்கள், அதைச் சுலபமாக நிறை வேற்றிக்கொள்கிறார்கள்.

**பணக்காரர்களின் மூன்று நண்பர்கள்...**

பணக்காரர்கள் தங்களுடன் மூன்று பேரை நண்பர்களாக வைத்திருப்பார்கள். வழக்கறிஞர், தணிக்கையாளர் (Auditor) மற்றும் நிதி ஆலோசகர்கள்தான் அந்த மூன்று பேர். அவர்கள் சொத்து ஏதாவது வாங்குவது எனில், இந்த மூவரிடம் ஆலோசனை கேட்காமல் செய்ய மாட்டார்கள். சாதாரண மக்கள் இவர்களுக்கு சில நூறு அல்லது ஆயிரம் ரூபாய் ஆலோசனைக் கட்டணம் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஆலோசனை கேட்பதில்லை விளைவு, மோசடியான சொத்து மற்றும் முதலீடுகளில் மாட்டிக்கொள்கிறார்கள்.

**வெளியில் சாப்பாடு...**

பணக்காரர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் அதிகமாக வெளியில் சாப்பிட மாட்டார்கள். இதனால், இரு நன்மைகள். ஒன்று, உடல் ஆரோக்கியம். மற்றது, பணச் சேமிப்பு ஆகும்.

**ஓய்வுக்காலத்திற்கான சேமிப்பு...**

பணக்காரர்கள் இப்படி மிச்சமாகும் பணத்தை தங்களின் ஓய்வுக்காலத்துக்கு சேமிக்கிறார்கள். இந்த விடயம், அமெரிக்காவைச் சேர்ந்த கன்சாஸ் ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் மருத்துவ உளவியலாளரான பால் சல்லிவன் மற்றும் சக ஊழியர் பிராட் க்ளோன்ட்ஸ் ஆகியோர் நடத்திய ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆனால், ஏழைகள் சம்பாதிக்கும் காலத்தில் தேவை இல்லாத செலவுகளை செய்துவிட்டு, பணி ஓய்வுக்காலத்தில் பணத்துக்குக் கஷ்டப் படுகிறார்கள் ஒருவர் தன் சம்பாத்தியத்தில் 10% தொகையை சேமித்தாலே ஓய்வுக் காலத்தில் ராஜாவைப் போல வாழலாம்.

பணக்காரர்களின் இந்தப் பணப் பழக்கங்களை நீங்களும் பின்பற்றி செல்வம் சேர்க்க வாழ்த்துகள்..!

ஊர்க் கோயிலில் ஒரு வாரமாக ராமாயண காலட்சேபம். ஒருநாள் கோயிலுக்கு வந்தார் மாலுக்தாஸ். காலட்சேபம் செய்து கொண்டிருந்த பெரியவர், "ராமன் பசிக்கு உணவு கொடுப்பான், உடுத்த உடை கொடுப்பான், இருக்க வீடு கொடுப்பான்..." என்று சொல்லிக் கொண்டிருந்தார். குறுக்கிட்டார் மாலுக் தாஸ "சரி, உங்க ராமனைக் கும்பிடுறேன். காட்டுல போய் நான் 'ராமா ராமா'என்றால் எனக்கு சாப்பாடு கொடுப்பானா? அப்போது நான் நம்புறேன்."

"நிச்சயம் கொடுப்பான்" என்றார் பெரியவர்.

அடுத்த நாள். நடுக்காடு. ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார் மாலுக் தாஸ். "ராமா ராமா" என்று சொல்ல ஆரம்பித்தார். மதியம் கடந்தது. குதிரைகளின் குளம்படிச் சத்தம். எங்கிருந்தோ வந்தார்கள் அரசாங்கப்படை வீரர்கள். மரத்தடியில் அமர்ந்தார்கள், கையோடு கொண்டு வந்திருந்த உணவுப் பாத்திரங்களைப் பிரித்தார்கள்.

எங்கிருந்தோ சிங்கம் கர்ஜிக்கும் சத்தம். அவ்வளவுதான். எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு, குதிரையில் ஏறிப் பறந்தார்கள். சிங்கம் வேறு திசையில் போய்விட்டது. கீழே வெள்ளிப் பாத்திரங்களில் சுவையான உணவு. ஆனால், மாலுக்தாஸ், ராமனுக்கு நான் கூப்பிட்டது கேட்டிருக்கணும். அதுக்காக நான் இறங்கியெல்லாம் சாப்பிட மாட்டேன் அதுவா வரட்டும்' என நினைத்தபடி அப்படியே அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்தில் ஒரு கொள்ளைக் கூட்டம் வந்தது. பசியோடிருந்தவர்களுக்கு, உணவைப் பார்த்ததும் கண்கள் விரிந்தன. "நடுக்காட்டில வெள்ளிப் பாத்திரங்களில் சாப்பாடா... இதுல விஷம் கலந்திருக்கணும்' என்கிற சந்தேகம் தலைவனுக்கு எழுந்தது. சுற்றும் முற்றும் தேடினார்கள். மரத்திலிருந்த மாலுக் தாஸைக் கீழே இழுத்துவந்தார்கள். மரத்தில ஏறி என்ன செய்கிறாய்... இதில விஷம் கலந்திருக்குதானே... நீ சாப்பிடு முதல்" என்று அவர் வாயில் உணவைத் திணித்தார்கள். சாப்பிட்டு முடித்ததும், நடந்ததையெல்லாம் சொன்னார். கொள்ளைக் கூட்டம் உணவைச் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து கிளம்பியது. "பாத்துப் போப்பா... ஒரு சிங்கம் இங்கே உலாத்திக்கிட்டு இருக்கு" என்றுவிட்டுப் போனான் கொள்ளைக்கூட்டத் தலைவன்.

"நடுக்காட்டுல சாப்பாடு கொண்டு வந்து, ஊட்டியும்விட்ட ராமன் சிங்கத்திடமிருந்து காப்பாத்த மாட்டானா? ராமா ராமா" என்றபடி ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தார் மாலுக் தாஸ்.

# சிங்கம் என்ன செய்யும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருத்துவர் அர்ச்சுனாவிற்கு ஆதரவாக மக்கள் செய்த எழுச்சி தொடர்பில்...?

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**மதிப்பிற்குரிய வியாசரே தமிழ் ஊடகங்களில் உங்கள் செய்தி ஊடகத்தை நான் பாராட்டுகிறேன்?**

தனிமனித வசைபாடும் எண்ணம் எமக்கு இம்மியும் இல்லை.அது எம் அகராதியிலேயே இல்லை.உண்மை எது? பொய்மை எது? என்று சீர்தூக்கிப் பார்த்து கடவுளுக்கு பயந்து, மக்களுக்கு உண்மையான செய்தி வழங்குவதில் வலம்புரி கண்ணியமாக நடக்கிறது.

இதை நாம் கூறும் போது மற்றைய ஊடகங்கள் அவ்வாறு இல்லை என்று பொருள் இல்லை.

தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் வேளை நான் பிறப்பெடுப்பேன் என்றான் பார்த்தீபன். அவனின் கையில் உள்ள வலம்புரி என்றைக்கும் அநீதிக்குத் துணை போகாது. இது உறுதி.

**கவிதரன் — யாழ்ப்பாணம்**

**சிந்திக்க வைக்கும் கதை ஒன்று கூற முடியுமா?**

உணவகம் ஒன்றிற்கு வரும் பார்வையற்ற ஒருவர் என்ன உணவு வேண்டும் என அங்குள்ள உணவு பரிமாறும் கரண்டிகளை நுகர்ந்து பார்த்துவிட்டு உணவை கேட்டு வாங்குவார்.

பலமுறை மிகச் சரியாக அவர் கேட்பதைப் பார்த்து வியந்த கடையின் உரிமையாளர் ஒரு நாள் அவர் வரும் போது வழங்கும் கரண்டிகளுக்குள் தனது மனைவியின் உதட்டில் உரசிய கரண்டியையும் வைத்து விட்டார்.

உணவுக்காக கரண்டிகளை நுகர்ந்த பார்வையற்றவர் எல்லாக் கரண்டிகளையும் நுகர்ந்துவிட்டு, கோழிக் கறியும் பரோட்டாவும் கேட்டுவிட்டு..

அது சரி என்னுடன் ஒன்றாய்ப் படித்த சுமதியும் இங்கே தான் வேலை செய்கிறாளா என்று கேட்டார்.

கடை உரிமையாளர் அந்த அதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை. ஆதலால் அவர் அதிலிருந்து மீளவே இல்லை.

**சுதன் — குப்பிழான்**

**சரணடைந்தவர்களை சுட்டுக் கொன்று புதைத்தமைக்கு கொக்குத்தொடுவாய் புதைகுழி ஆதாரம் போதுமானதா வியாசரே?**

புதை குழிகளுக்குள் இருக்கும் மர்மங்கள் துலங்க வேண்டும்.

அதற்கான நீதியான விசாரணைகள் வேண்டும். இதற்கு சர்வதேசம் உறுதுணை புரிய வேண்டும்.

இதைவிடுத்து புதைகுழியை மண்மூடி மறைத்தது போல இவ் விடயத்தையும் மூடி மறைக்க முற்பட்டால் அது எதிர்காலத்திற்கு அவ்வளவு நல்லதல்ல.

பாதிக்கப்பட்டது தமிழினம். அந்தப் பாதிப்புக்கான நீதி உண்மையானதாயும் நேர்மையானதுமாய் இருக்க வேண்டும்.

இதையே தமிழினம் அழுத்திக் கேட்டு நிற்கிறது. இதைச் சர்வதேசம் புரிந்து கொண்டால் சரி.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சி.இளங்கோ — மானிப்பாய்**

**தமது பிழைகளை மறைத்து மற்றவர்கள் மேல் தவறைப் போடும் மனிதர்கள் மனிதாபிமானம் உள்ளவர்களா?**

தவறுகளை மறைப்பது கொடுமை எனின் தமது தவறுகளை மற்றவர்கள் மேல் சுமத்துவது கொடுமையிலும் கொடுமை.

மனச்சாட்சிக்குப் பயந்த இனமாக இருந்த மனித குலம் இப்போது மனச்சாட்சியாவது மண்ணாங்கட்டி என்று மனிதாபிமானத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டது.

இந்த நிலை மனநோய்க்குரிய நிலை. இதைச் சரி செய்யாவிடின் மனித இனமே மனநோய் கொண்டு வீதிகளில் அலையும் நாளை கண்டு விடும்.

இவற்றிற்கு ஒரே தீர்வு ஆன்மிகப் பாதை. இந்தப் பாதையில் பயணிப்பவர்களே மனிதனாக இந்தப் பாரில் வாழ்வர்.

**சிவா — கோவில்சந்தை**


**மற்றவர்களின் நிலை கண்டு அவர்களிற்கு அறிவுரை சொல்பவன் முட்டாளா வியாசரே?**

இந்த உலகத்தில் மிகச் சுலபமான விடயம் எது தெரியுமா?

மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவது. அதேபோல மிகக் கஷ்ரமான விடயம் எது தெரியுமா? அந்த அறிவுரைப்படி நாம்(அறிவுரை வழங்குபவர்) நடந்து கொள்வது.

இந்த உண்மையைத் தெரியாமல் வீணாய்ப்போகும் நீரைத் தென்னைக்குத் திருப்பி விடுவது போல மற்றவர்களுக்கு அறிவுரை கூற முற்பட்டு நாம் அசிங்கப்பட்டு நின்றுவிடக் கூடாது.

ஆதலால் அறிவுரை வழங்குவதைத் தவிர்த்து அதை எம் மனதிருத்தி வாழ்ந்தால் வாழ்வில் வெற்றி அடையலாம்.



சரணடைந்தவர்களை சுட்டுக் கொன்று புதைத்தமைக்கு கொக்குத்தொடுவாய் புதைகுழி ஆதாரம் போதுமானதா வியாசரே?

**திகான் — வடமராட்சி**

**வடக்கின் தமிழ் அரசியல்வாதிகள் இயற்கையான,சுத்தமான மலிவான உணவகங்களை நடத்தினால் அவர்களின் சொத்து குறைந்துவிடுமா?**

அவர்களுக்கு இந்த பிஸ்னஸ் சரிப்பட்டு வராது தம்பி. இது பிச்சை பிஸ்னஸ். இதில் முதல் போட்டுவிட்டு அஞ்சிற்கும் பத்திற்கும் அவஸ்தைப்பட வேண்டிய தலையெழுத்தா அவர்களுக்கு.

அவர்களின் பிஸ்னஸ் வேறு மாதிரியானது. அது பெரிது. மிகப் பெரிது.

மதுபானச் சாலைகளை நிழல் முதலாளியாய் இருந்து நடத்துவது, எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆள்வைத்து இயக்குவது என்று அவர்களின் பிஸ்னஸ் பிக்கப் வேறு லெவல். ஆண்டுக்கு கோடியில் மிதப்பவர்களை பிளேன்ரி பத்து ரூபாவிற்கு விற்கச் சொன்னால் வருவார்களா என்ன?

**டனுஷாந் ராசா — திருநெல்வேலி**

**சாவகச்சேரி வைத்தியர் அர்ச்சுனாவின் நேர்மையைப் பாராட்டுங்களேன் வியாசரே?**

மருத்துவத் துறையை மக்கள் மகத்துவமான துறையாகக் கருதினர். அது கடவுளுக்கு ஒப்பான ஒன்றாக மதித்தனர்.

அதனால் தான் சைவத்தின் மூலப் பொருளாகிய சிவனை வைத்தியநாதன் என்று போற்றினர்.

அந்த வைத்தியத்தில் ஊழலும் உண்மை மறுப்பும் இருந்தால் அது மக்களுக்கு கோபத்தையே ஏற்படுத்தும்.

அந்த உண்மைகளை அர்ச்சுனா சுட்டிக் காட்டினார். தவறுகளைத் தட்டிக்கேட்டார். முடிவு அவரை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதாய் அமைந்தது.

**மதுவன் — மீசாலை**
**விஜயதரன் — உரும்பிராய்**

**மருத்துவர் அர்ச்சுனாவிற்கு ஆதரவாக மக்கள் செய்த எழுச்சி தொடர்பில்...?**

மருத்துவர் அர்ச்சுனாவிற்கு ஆதரவாக மக்கள் எழுச்சி என்பதை விட எமது பிரதேசத்திற்கு நல்ல மருத்துவம் தேவை. அந்த மருத்துவம் ஊழல் அற்ற நேர்மையான மருத்துவமாக இருக்க வேண்டும் என விரும்பினர்.

அதை மருத்துவர் அர்ச்சுனா தட்டி விட்டார். அந்தச் சிறு தீ ஊழல் அற்ற மருத்துவ சேவையே எமக்கு வேண்டும் என மக்கள் கொழுந்துவிட்டு எழுந்து- எரிந்து நின்றனர்.


இந்த மக்கள் எழுச்சியை நாம் சர்வ சாதாரணமாக நினைத்துவிட முடியாது. இனி மக்கள் அனைத்து ஊழல்களுக்கும் எதிராக வீதிக்கு வருவர் என்ற எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டுள்ளது.

இது சிலரின் வயிற்றில் புளியைக் கரைக்கவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## இராமநாதன் கல்லூரியின் ஒருபகுதிக் காணியை யாழ்.பல்கலைக்கழகம் சுவீகரிக்கக் கூடாது



**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

டாக்டர் பாலா என்று இணுவில் மக்களால் அன்பாக அழைக்கப்படுகின்ற டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

இணுவில் மண்ணில் இருந்து மருத்துவ சேவையை மிகச் சிறப்பாக வழங்கிய டாக்டர் கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்துஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, இப்ப சாவகச்சேரி வைத்தியசாலையின்ர நிலைமை எப்படி இருக்குது.

**கங்காணி:-** அங்க ரஜீவ் என்ற மருத்துவரை பதில் அத்தியட்சகராக நியமித்திருக்கினம்.

டாக்டர் ரஜீவ் சாவகச்சேரி சரசாலையைச் சேர்ந்தவர் என்பதால அந்தப் பகுதி மக்கள் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவினம் என்ற நம்பிக்கையில மாகாண சுகாதாரத் திணைக்களம் அப்படியொரு தீர்மானத்தை எடுத்திருக்குது.

**மூப்பர்:-** டாக்டர் இராமநாதன் அர்ச்சுனாவின், நிலைமை



டாக்டர் கந்தையா பாலசுப்பிரமணியம்

இப்ப எப்படி இருக்குதாம்.

**கங்காணி:-** தான் ஒரு வேலையில்லாப் பட்டதாரி என்று டாக்டர் அர்ச்சுனா சொல்லியிருக்கிறார்.

**மூப்பர்:-** தெரியாமல் தான் கேட்கிறன். டாக்டர் அர்ச்சுனாவுக்கு அரசியலில் இறங்கிற நோக்கம் ஏதும் இருக்குதோ.

**கங்காணி:-** அப்படித் தனக்கு நோக்கம் இல்லை எண்டு தான் சொல்லுகிறார்.

ஆனால் தான் அரசியலில ஈடுபடுவது தொடர்பில பொது மக்களின்ர அபிப்பிராயங்களைக் கேட்டிருக்கிறார் எனும் போது தான் அவருக்கு அரசியல் நாட்டம் இருக்குது போலத் தெரியுது.

**சிறாப்பர்:-** டாக்டர் அர்ச்சுனா அரசியலில் இறங்கலாம். ஆனால் அது தேர்தல் அரசியலாக இருக்கக் கூடாது.

மருத்துவத்துறையில எங்கெல்லாம் ஊழல் நடக்குதோ, எங்கெல்லாம் சுகாதார சேவை மந்தமாக இருக்குதோ அங்கெல்லாம் சென்று குரல் கொடுப்பதாக டாக்டர் அர்ச்சுனாவின் பணி இருக்க வேணும். இதை விட்டிட்டு தேர்தல் அரசியலில இறங்கினால் தெரியும் தானே, எங்கட ஆட்கள் வறுத்தெடுத்துப் போடுவினம். பிறகென்ன டாக்டர் அர்ச்சுனாவும் கௌரவர் தரப்பாகிவிடுவார்.

இவ்வாறு சிறாப்பர் கூற, ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது. அந்தச் சிரிப்பொலிக்கிடையே குறுக்கிட்ட சாத்திரியார் சதாசிவம்; எங்கட தமிழ் இனத்தில பாண்டவர்களாக வந்து கௌரவர்களாக மாறினவர்கள் தான் அதிகம்.

அத்தகையதொரு மாற்றம் டாக்டர் அர்ச்சுனாவையும் உலுக்கிப் போடும் கவனம்.இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடி மௌனித்தது. மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-**டாக்டர் அர்ச்சுனாவுக்காக ஒரு பெரும் ஜோதி எழுந்திருக்குது. அந்த ஜோதியை அவரே அணைத்துவிடக் கூடாது.

பொதுவில எழுந்த ஜோதியை அணைத்து விட்ட வரலாறு தான் எங்கட இனத்திற்கு உண்டு.

குறிப்பாக வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்த போது, எங்கட மக்கள் ஒரு பெரும் ஜோதியாக எழுந்தனர்.

ஆனாலும் அப்பெரும் ஜோதியை தக்க வைப்பதில நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் தவறிவிட்டார்.

இப்ப விக்னேஸ்வரன் ஐயா அழைத்தால் ஒருத்தரும் போக மாட்டினம் என்கிற அளவில அவர் தன்ர நிலைமையைக் கொண்டு வந்திட்டார்.

இப்ப டாக்டர் அர்ச்சுனாவுக்காக சாவகச்சேரியில ஒரு ஜோதி எழுந்தது.

அந்த ஜோதியை டாக்டர் அர்ச்சுனா தக்க வைக்க வேணும்.

ஆனால் அவர் வழங்குகிற செவ்விகள், முகநூல் பதிவுகள் என்பவற்றைப் பார்க்கும் போது, அவருக்காக எழுந்த ஜோதியை அவரே அணைத்து விடுவாரோ என்ற ஏக்கம் ஏற்படுகுது. எதற்கும் பொறுமையையும் நிதானத்தையும் டாக்டர் அர்ச்சுனா கடைப்பிடிக்க வேணும்.

இல்லையெண்டால் எல்லாம் அம்போ என்றாகிவிடும். இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

பொன்விழாவைக் கொண்டாடுகிற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர பிரதான நுழைவாயிலின் இரு மருங்கிலும் இருந்த நந்திகள் அகற்றப்பட்டு சில மாதங்கள் கடந்து போயிற்று.

இன்னமும் அந்த நந்திகள் வைக்கப்படவில்லை.இந்த நிலையில மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின்ர காணியில ஒரு பகுதியை நுண்கலைப் பீடத்திற்காக சுவீகரிக்க யாழ்.பல்கலைக்கழகம் முயற்சிப்பதாகக் கேள்வி.

**விதானையார்:-** பல்கலைக்கழகத்திற்குக் காணி தேவை எண்டால், தீவகத்தில அதனை எடுக்கலாம்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின்ர காணியின்ர ஒரு பகுதியை பல்கலைக்கழகம் எடுகிறதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இது விடயத்தில பாடசாலை நிர்வாகம் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்க வேணும். வேணுமெண்டால் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்ய வேணும்.

சைவப்பெரு வள்ளலின்ர காணிகளை சுவீகரிக்கிறது. ஆனால் இருந்த நந்திகளை அகற்றி விடுவது.

ஆகையால இனியும் நாங்கள் ஏமாறக் கூடாது. இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



19 செங்கை ஆழியான்

இவற்றின் நிர்வாக மையம் யாழ்ப்பாணக் கோட்டையாகிவிருந்தது. யாழ்ப்பாணப் பட்டினத்தி லுள்ள (யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும்) காணிகள் மக்களுக்குரியதாக பரவணிக் காணிகளாக விருந்தன.

பரம்பரை பரம்பரையாக ஆண்டு அனுபவித்து வரும் காணிகள். ஆனால் வன்னிப் பிரதேசக் காணிகளில் பெரும் பகுதி அவ்வாறிருக்கவில்லை. அதனால் வன்னிக் காணிகளுக்கு ஒல்லாந்தக் கம்பனி உரிமை பாராட்டியது.

ஒல்லாந்த ஆளுநரால் நியமிக்கப்பட்ட வன்னியர்கள் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்தி ஆண்டனர். வருடமொன்றுக்கு 30 யானைகள் திறை, அவற்றில் மூன்றிலிரண்டு ஆண் யானைகளாகவும் எஞ்சியவை பெண்யானைகளாகவும் ஒல்லாந்தருக்கு வன்னியரால் திறை செலுத்தப்பட்டன.

1662 ஆம் ஆண்டு ஒல்லாந்தக் கொமுசாறி றைக்ளோப் வன்ஹூன்ஸ், இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வந்தான். ஒல்லாந்த ஆளுநராகக் கொழும்பிலிருந்து அட்றியான் வன்டோமேய்டன் என்பவனிடமிருந்து அதிகாரத்தைப் பொறுப்பேற்றான். அவ்வாறு இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வருவதற்குமுன் யாழ்ப்பாணக் கோட்டையில் ஒரு சதி நடந்தது.


யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஒல்லாந்தரைத் துரத்திவிட்டு யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற ஒரு பெரும் சதி நடந்துள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஒல்லாந்தப் படைவீரர்களில் ஒருபகுதியினரை இந்தியாவிற்கு, நாகபட்டினத்திற்கு அனுப்பி வைக்க நேர்ந்தது.

நாகப் பட்டினத்தில் ஒல்லாந்தருக் கெதிரான கிளர்ச்சியொன்றினை முறியடிப்பதற்காக ஒல்லாந்தப்படை அங்கு சென்றது.

அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றச் சதித்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இச் சதித்திட்டத்தில் டொன்லூயிஸ் என்பவன் முதன்மை வகித்தான். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அங்கிருந்த போர்த்துக்கேயரில் சிலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருப்போமெனச் சத்தியம் செய்து கொடுத்திருந்தனர்.

அவர்களில் ஐந்து பறங்கிகள் இச்சதியில் சம்பந்தப்பட்டிருந்தனர். மன்னாரைச் சேர்ந்த ஒரு கோயிற் பற்றுத் தலைவனும் இதில் சேர்ந்திருந்தான். இவர்களோடு கல்தெறா என்ற கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவரும் கூட்டுச் சேர்ந்திருந்தார்.

(தொடரும்...)




# கடல் புறா

இரைந்து பேசாதே இடும்பா! இந்தத் தோட்டத்தின் மரங்களுக்கும் காதுகள் உண்டு என்று பலவர்மன் எச்சரிக்கை செய்தான்.

இதைக் கேட்டதும் அசுரனைப் போல் நிமிர்ந்து நின்ற இடும்பனின் இமைகள் வியப்பால் சற்றே முகத்தில் மேல் நோக்கி எழுந்தன. “பலவர்மனும் பயப்படும் காலம் வந்துவிட்டதா!” என்ற அவன் கேள்வியிலும் அந்த வியப்பு தொக்கிநின்றது.

பலவர்மன் நின்ற இடத்திலேயே சற்றுச் சங்கடத்துடன் அசைந்தான். “பலவர்மன் மட்டுமல்லா, பதக்குகளும், ஏன், சூளுக்களும் பயப்படும்படியான காலம் வந்திருக்கிறது. என்றான் பலவர்மன்.

“சொர்ணத் தீவின் பூர்வகுடிகள் அச்சமென்பதை அறியாதவர்கள்” என்று சீறினான் இடும்பன்.

“அறியாதவர்களாய் இருந்தார்கள்,” என்று திருத்திய பலவர்மன் குரலில் ஏளனம் ஒலித்தது. கவலையும் அதில் கலந்திருந்தது.

அப்படியானால் இப்பொழுது அச்சப்படுகிறார்கள் என்பது உன் எண்ணமா? என்று வினவினான் இடும்பன்.

சந்தேகமிருந்தால் வில்வலனை விசாரித்துப் பார் என்றான் பலவர்மன் பதிலுக்கு.

இதைக் கேட்ட இடும்பன் சிறிதும் சலிக்கவில்லை. “கடற்கரை நடனத்தின்போது நடந்ததைக் குறிப்பிடுகிறாயா” என்று கேட்டான் இடும்பன்.

“ஆம்” என்று கூறி தலையையும் அசைத்தான் பலவர்மன்.

“அந்தக் கொலையைக் கண்டு வில்வலன் பயப்படவில்லை. இரண்டே நாட்களில் இந்த ஊரைச் சூறையாடிவிட ஏற்பாடு செய்திருந்தான். அதையும் நீ தடை செய்தாய்?” என்று குற்றம் சாட்டினான் இடும்பன்.

“ஆம் தடை செய்தேன்.”

“ஏன்?”

இரண்டாவது நாள் இந்த ஊரில் புகுந்த கொலையும் கொள்ளையும் நீங்கள் நடத்த முடியாத நிலை ஏற்பட்டதால்தான்”

“அப்படி என்ன நிலை ஏற்பட்டது?”

“மக்களுக்குத் துணிவு ஏற்பட்டுவிட்டது. அவர்களுக்குத் தலைமை

## அன்பின் வழி

வகிக்கவும் ஊரைப் பாதுகாக்கவும் ஒரு பெரும் படைத்தலைவன் ஏற்பட்டுவிட்டான்.

யாரோ அகூதாவின் உபதலைவனாமே, அவனோ?

அகூதாவின் உபதலைவன் மட்டுமல்ல அவன்.

“வேறு யார்! இந்திரனா? சந்திரனா?”

“இரண்டு பேரும் புராணப் பாத்திரங்கள் அவர்களின் சக்தி நமக்குத் தெரியாது. இவன் சக்தி தெரியும்.”

“யாரிவன்?”

“சோழநாட்டின் படைத் தலைவர்களில் முதன்மையானவன். பெரும் போர்களைக் கண்டவன். இந்த நகரத்தை உங்களிடமிருந்து பாதுகாப்பது அவனுக்குப் பிரமாதமல்ல.

இடும்பனுடைய பயங்கர விழிகள் பலவர்மனை நன்றாக ஏறெடுத்து நோக்கின. இனிமேல் இராக் காலங்களில் இருட்டுத்தான். நாளையே வில்வலன் காட்டுப்பகுதியிலிருந்தும், நான் கடற்பகுதியிலிருந்தும், இந்தக் கோட்டையைத் தாக்குவதை யார் தடுக்க முடியும்? என்று வினவினான் இடும்பன்.

இரண்டையும் சோழர் படைத் தலைவன் தடுக்க முடியும். என்று கூறிப் பெருமூச்செறிந்தான் பலவர்மன்.

இடும்பன் ஒருமுறை கடலிருந்த திக்கை நோக்கினான். “கடற்போரில் என்னை வெல்ல அவனால் முடியுமா? என்று கேட்டான் சற்றுக் கோபத்துடன்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உண்மையான "தமிழ் தேசியம்" எது?



இல்லங்களுக்கு ஓடிச் சென்று
கண்ணீர் விடுவதோ
பாராளுமன்றத்தில் தமிழர்களின்
அழிவுகளைச் சொல்லி
ஓலமிடுவதோ அல்ல!
சாகாமல் தப்பிப்பிழைத்து
வாழ வழியின்றி துன்பப்படும்
தமிழர்களுக்கு செய்யும்
தேவைகளும் உதவிகளும்
அவர்களை வாழ வைக்கும்
செயல்களும் தான்
உண்மையான "தமிழ் தேசியம்"

ஈஸ்வரன், உரும்பிராய்

## மருத்துவம்; மகத்துவம்

மருந்து கால், மதி முக்கால் என்பர்
எது பாதி, எது மீது என்பது
எமக்குத் தெரியா!
கண்ணிடை மணிபோல் மிளிரும்
மருத்துவம், அது மகத்துவம்
இன்று கதி கலங்கி நிற்கிறது!
எண்ணிப் பார்த்திட இயலாத
எதுவெதுவோ நடக்கிறது!


கத்தி எடுத்தவன்
கத்தியாலே மடிவான் என்ற
மகா தத்துவத்திற்கு எதிர்மறையாய்,
மகத்துவமான மருத்துவத்தில்
கத்தியை புத்தியில் நிறுத்தி,
மாந்தர் உயிர் காக்கும்
உத்தமம் இந்த மருத்துவம்!

வில்வித்தைக்கு பேர் போனவன்
மகத்துவ மருத்துவத்தையும்
சில மருத்துவரையும்
தோலுரித்திச் சுழை காட்டினான்.
அவர்களால் அவலப்பட்ட மக்கள்
அலையாய் எழுந்தனர்!
அந்த அலை...
மகத்துவ மருத்துவத்தைக் காக்க...
மாபியா மருத்துவரை ஒழிக்க...

உலகத் தோற்றத்தின்
உன்னத நாயகன் சிவனுக்கு
வைத்தீஸ்வரன் என்ற பெயருண்டு!
பிணி நீக்கும் அவன் பெயரை,
தம் அடைமொழியாக்கியவர்
மக்கள் சேவை செய்து
மகத்துவம் காக்க வேண்டும்!

இல்லையேல்...
மருத்துவத்தை மகத்துவமாய்
மதிக்கும் மருத்துவர் பலரின்
சேவைகள் மதிப்பிழந்து
போய் விடும்!

மாவை.நா.கஜேந்திரன்



### மௌனத்தின் தேடல்-724



### வீரமும் கோழையும்

நீ வீரனாய் இருந்தாலும்
முதுகில் குத்தியதால் கோழையே
நீ கோழையாய் இருந்தாலும்
முரட்டுக் குதிரைக்கு
முகத்திலே குத்துவதால் வீரனே

துனவியூர் நடா.

### மௌனத்தின் தேடல்- 725



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம்.

### ஈனச் செயல்

நேருக்கு நேர் எதிர் நின்று துணிவாகச் சண்டை செய்து
வெற்றிவாகை சூடுவதென்பது ஓர் நேர்மையுள்ள
அஞ்சாநெஞ்சங் கொண்ட வீரனுக்கு அழகு- ஆனால்
முன்னால் போக விட்டு பின்னால் பதுங்கி நின்று
புறமுதுகில் குத்துதலென்பது பேடித்தனமுள்ள கோழைத்தனமிக்க
ஓர் படுபாதக அற்ப ஈனச்செயலே

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

### கட்டப்பா... எட்டப்பா...

கட்டப் பொம்மனுக்கு
ஒரு எட்டப்பன் என்பது
பாகுபலிக்கு
கட்டப்பாவாய் விரிந்தது...
ஒண்டு மண்டாய் உண்டு மகிழ்ந்து
ஒன்றாய்ப் போரிடும் நேரத்தில்
முதுகில் குத்திய கட்டப்பா
இந்தத் தலைமுறையின் எட்டப்பா!
உன்னை இந்த நாடு ஏற்காது
உன்னை இந்த உலகம் உமிழும்
நீ இறுதிவரை துரோகி எனும்
பழிச் சொல்லுடனேயே
வாழ்ந்து மறைவாய்

யசோன் நொவின்

### குற்றமும் சுற்றமும் (வாளும் வாழ்வும்)

குறுகிய கால கட்டத்தில்
சுருக்கென்று சுகம் பெற
குறுக்கு வழியதை தெரிவதும்
புற முதுகில் குத்துவதும்
தொன்று தொட்டுத் தொடர்ந்து
இன்று வரை நடந்து வந்தாலும்
குறைகள் குன்றாகி விடுவதால்
திரையிட்டு மறைக்க முடியாது
குற்றமுள்ள நெஞ்சமென்றும்
குறுகுறுத்துக் கொண்டேயிருக்கும்
எண்ணமே வாழ்வு என்பதால்
கண்ணியமே புண்ணியம் தரும்

க.நாகராசா நுணாவில்.

### நம்பிக்கைத் துரோகம்

நல்லவர் போல் நடித்திடுவார்
நல்ல நான்கு வார்த்தைகள் பேசிடுவார்
நட்பாய் எம்முடன் பழகிய பின்
நம்பிக்கைத் துரோகமும் செய்திடுவார்
பணம் பொருள் சொத்துக்காய்
பாசமாய் பழகிய உடன்பிறப்பை மறந்திடுவர்
முதுகின் பின் நின்றே கத்தியால் குத்திடுவர்
கூட இருந்தே குழிபறித்து
குதூகலமும் அடைந்திடுவர்
பாம்பின் விஷத்தை விட மனித வேஷம்
பாரினிலே கொடிது என உணர்ந்து
நீயும் நடந்திடுவாய்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : வட்டத்துக்குள் சதுரம்
இசை : இளையராஜா
பாடல் : பஞ்சு அருணாசலம்
பாடியவர்கள் : பி.எஸ்.சசிரேகா, எஸ்.ஜானகி



இதோ இதோ என் நெஞ்சிலே ஒரே பாடல்
அதோ அதோ என் பாட்டிலே ஓரே ராகம்
கொடி நீ மலர் நான் கிளை நீ கனி நான்
மனம் போல் வாழ்வோம் துணை நீ
இதோ இதோ என் நெஞ்சிலே ஒரே பாடல்

ஓடுது ரயில் பாதை மனம் போலவே
பாடுது குயில் அங்கே தினம் போலவே
மா மரம் பூ பூத்து விளையாடுது
காடெங்கும் புது வாசம் பரந்தோடுது
பார்த்தது எல்லாம் பரவசம் ஆகும்
புதுமைகள் காண்போம் என்னாளுமே
இனி வாழ்வில் நீதான் என் சொந்தமே

இதோ இதோ என் நெஞ்சிலே ஒரே பாடல்..

தீபத்தின் ஒளியாக ஒரு பாதி நான்
வசந்த்தின் மலராக மறு பாதி நீ
காற்றினில் ஒலியாக வருவேனடி
கனவுக்குள் நினைவாக வருவாயடி
நிலவுக்கு வானம் நீருக்கு மேகம்
கொடிகொரு கிளைபோல் துணை நீயம்மா
இனி வாழ்வில் நீதான் என் சொந்தமே

இதோ இதோ என் நெஞ்சிலே ஒரே பாடல்...

ஓடமும் நீரின்றி ஓடாதம்மா
நீ சொல்லும் வழி நானே வருவேனம்மா
தோழமை உறவுக்கு ஈடேதம்மா
நீ சொன்ன மொழி நானே கேட்பேனம்மா
உனக்கென நானும் எனக்கென நீயும்
உலகினில் வாழ்வோம் என்நாளுமே
இனி வாழ்வில் நீதான் என் சொந்தமே

இதோ இதோ என் நெஞ்சிலே ஒரே பாடல்...

ராமனின் குகனாக உனை பார்க்கிறேன்
மாலதி அணுவாக நான் வாழ்கிறேன்
இரு மனம் அன்பாலே ஒன்றானது
நேசத்திலே உள்ளம் பண்பாடுது
பறவைகள் போலே பறந்திடுவோம்
மகிழ்வுடன் வாழ்வோம் என்நாளுமே
இனி வாழ்வில் நீதான் என் சொந்தமே

இதோ இதோ என் நெஞ்சிலே ஒரே பாடல்
அதோ அதோ என் பாட்டிலே ஓரே ராகம்...

# பிரிட்டன் தேர்தல்

## ஓங்கிய இடதுசாரிகளின் கை

14 ஆண்டுகள் கழித்து ஆட்சி மாற்றத்தைச் சந்தித்திருக்கிறது பிரிட்டன். வலதுசாரிகளை வீட்டுக்கு அனுப்பி, இடதுசாரிகளை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள் பிரிட்டன் மக்கள். மொத்தமுள்ள, 650 பாராளுமன்றத் தொகுதிகளில் 412 தொகுதிகளைக் கைப்பற்றி அபார வெற்றிபெற்றிருக்கிறது தொழிலாளர் கட்சி. ரிஷி சுனக்கை முன்னிறுத்தி தேர்தலைச் சந்தித்த ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 244 தொகுதிகளை இழந்து வெறும் 121 தொகுதிகளை மட்டுமே வென்றிருக்கிறது.

### தோல்விக்குப் பொறுப்பேற்ற சுனக்!

2019 பிரிட்டன் தேர்தலில் 365 இடங்களை வென்ற கன்சர்வேட்டிவ் கட்சி பெரும்பான்மையோடு ஆட்சியமைத்தது. கட்சிக்குள் அடுத்தடுத்து நடந்த கலகத்தால், மியூசிக்கல் சேர் ஆனது பிரதமர் அரியணை. கடந்த ஐந்து ஆண்டுகளில், மூன்று பிரதமர்களைக் கண்டது பிரிட்டன். போரிஸ் ஜான்சன், லிஸ் ட்ரஸ்ஸைத் தொடர்ந்து, 2022இல் பிரிட்டன் பிரதமரானார் ரிஷி சுனக்.

'பிரிட்டனின் இளம் வயது பிரதமர்', 'முதல் இந்திய வம்சாவளிப் பிரதமர்' எனச் சில சாதனைகளைத் தன்னகத்தே வைத்திருக்கும் ரிஷி சுனக், கன்சர்வேட்டிவ் கட்சியின் வரலாறு காணாத தோல்வி' என்ற சோதனையுடன் விடைபெற்றிருக்கிறார். 'இந்தத் தோல்விக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொல்லி, கட்சித் தலைவர் பதவியையும் ராஜினாமா செய்திருக்கிறார் சுனக்.

### மீண்டும் இடது பக்கத் திருப்பம்!

1900 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தொழிலாளர் கட்சி, பலமுறை இங்கிலாந்தை ஆட்சி செய்திருக்கிறது. 2010 தேர்தலில் தோல்வியடைந்த தொழிலாளர் கட்சியால், அடுத்த மூன்று தேர்தல்களிலும் வெற்றியை ருசிக்க முடியவில்லை. ஆனால், இந்த முறை மிகப்பெரிய வெற்றியைப் பெற்று மீண்டும் ஆட்சியமைத்திருக்கிறது. 2020ஆம் ஆண்டு முதல் கட்சியின் தலைவராக இருக்கும் கியர் ஸ்டார்மர் பிரிட்டனின் புதிய பிரதமராகியிருக்கிறார். இதன் மூலம் பிரிட்டன் அரசியல், மீண்டும் இடதுசாரிகள் பக்கம் திரும்பியிருக்கிறது!

இந்தத் தேர்தலில் தொழிலாளர் கட்சி சார்பாகப் போட்டியிட்ட இலங்கைத் தமிழரான உமா குமரன் வெற்றிபெற்று, பிரிட்டன் தேர்தலில் வென்ற முதல் தமிழ் எம்.பி என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார். போட்டியிட்ட மற்ற ஏழு தமிழர்களுமே தோல்வியைத் தழுவியிருக்கின்றனர்.

### ஆட்சி மாற்றத்துக்கான காரணங்கள்!

200 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்திருக்கிறது கன்சர்வேட்டிவ் கட்சி. பாதுகாப்பு அமைச்சர், கல்வி அமைச்சர், சட்டத்துறை அமைச்சர் என ஆளும் தரப்பின் 10 அமைச்சர்கள் இந்தத் தேர்தலில் மண்ணைக் கவ்வியிருக்கின்றனர். கொரோனா காலத்தில் வீழ்ந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க, கன்சர்வேட்டிவ் அரசு சரியான கொள்கை முடிவுகளை எடுக்கவில்லை. அதன் பலனாக, உலக பொருளாதாரத்தில் பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி, ஐந்தாவது பெரிய பொருளாதார நாடானது இந்தியா. இந்தப் பொருளாதாரப் பின்னடைவுதான், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறது' என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்.

### யார் இந்த கியர் ஸ்டார்மர்?

'உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன் நான்' எனப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் ஸ்டார்மருக்கு வயது 61. சிறிய நகரத்தில், எளிய குடும்பத்தில் பிறந்த ஸ்டார்மர் ஒரு வழக்கறிஞர். மனித உரிமை சார்ந்த வழக்குகளில் அதிக கவனம் செலுத்திய இவர், 'மெக்டொனால்ட்ஸ்' நிறுவனத்தின் சுற்றுச்சூழல் கொள்கைகளுக்கு எதிராகப் போராடிய குழுவுக்கு இலவசமாக வாதாடிப் புகழ் பெற்றார். தொடர்ந்து, அரசு வழக்கறிஞராகப் பணியாற்றியவர், 2015இல்தான் முதன்முறையாக எம்.பி ஆனார்.

தொழிலாளர் கட்சியின் முன்னாள் தலைவர் ஜெர்மி கார்பினின் நெருங்கிய வட்டாரத்திலிருந்தவர் ஸ்டார்மர். 2019 தேர்தலில், தொழிலாளர் கட்சி தோல்வியடைந்த பிறகு நடந்த தலைவர் தேர்தலில் போட்டியிட்டு, அந்தக் கட்சியின் தலைவரானார். இன்று மக்களின் நம்பிக்கையைப் பெற்று, பிரிட்டனின் பிரதமராகியிருக்கிறார் ஸ்டார்மர்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


‘நித்திலம் தொகுத்து வழங்கும்’

# சுகமான விடியல்

408

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## எமது சுற்றாடல் காற்றை சுத்தம் செய்து சுகம் பெற




எமது சுற்றாடலில் வளிமண்டலத்தை சுத்தமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் வைத்திருப்பதன் மூலம் பல நோய்களைத் தவிர்த்து எமக்கு ஏற்கனவே இருக்கும் பல நோய்களிலிருந்தும் விடுதலைபெற முடியும்.

எமது சுற்றாடல் காற்று சுத்தமாகவும் குளிர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்பதில் நாம் அக்கறை குறைந்தவர்களாக இருக்கிறோம்.

நோயுற்று மூச்சுத்திணறி உயிருக்காய் போராடும் மனிதர்களை மீட்டெடுக்க ஈரலிப்பு கலந்த ஒட்சிசன் வாயு தேவைப்படுகின்றது என்பதை நாம் அறிவோம். ஒட்சிசன் இன்றி உயிரினங்கள் உயிர் வாழ முடியாது என்றும் தெரிந்து வைத்திருக்கின்றோம். அசுத்தக்காற்றாலும் அசுத்தநீராலும் நோயுற்றுவிழும் மக்கள் தொகைபற்றியும் அறிந்து வைத்திருக்கின்றோம்.

தூயகாற்றுக்காகவும் நீருக்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றோம். சுற்றாடல் வெப்பமாகி எமது சொந்தப் பூமிவரண்டுபோய் மண்ணும் மனித மனங்களும் மரத்துப் போன நிலையில் ஒருகுளிர்ச்சியான





நிழல் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் இவை அனைத்தையுமே அள்ளி வழங்க ஆயத்தமாக இருக்கும் பசுமையான மரங்கள் பற்றி நாம் அக்கறைப்பட்டுக் கொள்வதில்லை. அதற்கும் ஒருபடி மேலே சென்று அவற்றை அழித்துவிடவும் ஆயுதம் தூக்கிநிற்கின்றோம்.

எம்மை சுற்றி பச்சைப்பசேல் என்று வளரும்தாவரங்கள்அனைத்தும் எமக்கு அனைத்தையும் வழங்கும் அட்சயபாத்திரங்கள் என்று கருதுவது மிகைப்படுத்தப் பட்ட சிந்தனைஆகாது. பசுமையான மரங்கள் ஒவ்வொன்றும்




நித்தமும் பல்லாயிரக்கணக்கான லீற்றர் ஈரலிப்பான ஒட்சிசனை உருவாக்கிக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளாக விளங்குகின்றன.

அத்துடன் நாம் வெளியிடும் அசுத்தக்காற்றை உள்ளெடுத்து சுத்திகரிக்கும் வடிகட்டிகளாகவும் தொழிற்படுகின்றன. சுற்றாடலின் வெப்பநிலையைக் குறைத்து சூழல் வெப்பநிலையை மனிதன் சுகமாக வாழக்கூடிய ஒருவெப்பநிலையில் சீர் செய்துவைக்கும் ஒரு வெப்பநிலை சீராக்கியாகவும் இந்த மரங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தாவரங்களில் துளிர்த்து வளரும் குருத்துக்களும் பசுமையும் குளிர்ச்சியும் நிழலும் அதன் மலர்களும் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியையும் அமைதியையும் அள்ளி வழங்குகின்றன.

மாதம் மும்மாரி பொழியாவிட்டாலும் போதுமான அளவுமழை வீழ்ச்சி கிடைப்பதற்கும் எமது தண்ணீர்த்தேவையை நிவர்த்திப்பதற்கும் மரங்கள் இன்றியமையாதவை என்பதும் மரம் இன்றி மழை இல்லை என்பதும் எமக்குத் தெரியும்.

எமக்கு உணவுப் பொருட்களையும் வருவாயையும் தரும் தாவரங்கள் தான் பயனுள்ள தாவரங்கள் என்று எண்ணிக்



கொள்கிறோம். ஆனால்அனைத்து தாவரங்களுமே ஒருவகையில் பயனுடையவை தான் என்பதை மறந்து விடுகின்றோம். இந்த மரங்களையும் தாவரங்களையும் பாதுகாப்பதன் மூலம் எமது சுற்றாடலையும் வளிமண்டலத்தையும் ஆரோக்கியமாக பேணமுடியும்.

மரங்கள் பல அநாவசியமாக வெட்டி எறியப்படுகின்றன. மரங்களால் சுத்திகரிக்கப்பட்ட ஆரோக்கிய காற்றுகளுக்கு வீடுதோறும் கதவடைப்பு போராட்டம் நடக்கிறது. ஜன்னல்கள் அனைத்தையும் அடித்து மூடி, உள்ளேமின்விசிறிகள் போட்டு நாம் சுவாசித்து வெளிவிட்ட அசுத்தக்காற்றையே மீண்டும் மீண்டும் சுழல விட்டு சுவாசித்து பல நோய்களுக்கு ஆட்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

அத்துடன் இவ்வாறான அசுத்தக் காற்றை சுவாசிப்பது மன அமைதிக் குறைவு, நித்திரைக்குறைவு, கற்றல் செயற்பாடுகளில் தாக்கம் போன்றவற்றையும் ஏற்படுத்தலாம்.

நாம் வெட்டிவீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்காகவும் வேதனைப்படுவோம். அதற்கு பிராயச்சித்தமாக வீழ்த்திய ஒவ்வொருமரங்களுக்கு பதிலாகவும் ஒன்பது மரங்கள் நட்டு வளர்ப்போம்.

மரம் ஒன்றை நாட்டி வளர்ப்பது ஒரு உன்னதமான புண்ணிய காரியம் மட்டுமல்ல மனித குலத்திற்கும் மருத்துவ உலகத்திற்கும் செய்யும் ஒரு மகத்தான சேவை என்பதை மனதில் நிறுத்துவோம். தாவரங்களிலும் அன்பு செலுத்துவோம். நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்நாளில் எத்தனை மரங்கள் நட்டு வளர்த்தோம் என்பதை கணக்கிட்டு வைத்துக்கொள்வோம்.

அதைச்சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்வோம். மனிதனுக்கு உணவு உடை உறைவிடம், மருந்து, சுவாசக்காற்று, நிழல், குளிர்ச்சி, மன அமைதி, மழை, நீர், எரிபொருள், மகிழ்ச்சி என அனைத்தையுமே தொடர்ந்து அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் தாவரங்களையும் நட்டு வளர்ப்பதில் பெருமிதம் கொள்வோம்.

வீட்டுச் சுற்றாடலையும் பொது இடங்களையும் தாவரங்களால் பசுமைப்படுத்துவோம். பொது இடங்கள், கோயில்கள், தெரு ஓரங்கள், வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள் என அனைத்துபகுதிகளிலும் மரங்களை நாட்டிவளர்ப்பது எமது சுற்றாடல் காற்றையும் சூழலையும் வளப்படுத்தும் ஒரு புண்ணிய காரியமாகும்.

கோயில்கள் கோபுரங்கள் கட்டுவதில் எமக்கு இருக்கும் ஆர்வத்தைப் போல ஆயிரக்கணக்கில் மரங்கள் நாட்டுவதிலும் ஆர்வம் பிறந்தால் அது ஆரோக்கியமாக அமையும்.


Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்தியநிபுணர்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## முகாமைத்துவத்தை முறையாக முகிழ்ந்தெடுப்போம்



இயேசு தன் அப்போஸ்தலர்களை அருள்பணிக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வை இன்று பைபிளின் நற்செய்தியின் மாற்கு 6:7-13 பகுதி எமக்கு சில முக்கியமான பாடங்களைச் சொல்லித் தருகிறது. முதல் பாடமாக கொள்ளலாம்: "இயேசு தன் சீடர்களை இருவர் இருவராக அனுப்புகிறார்." ஆனால் தனித் தனியாக அனுப்பியிருந்தால், இன்னும் பல இடங்களுக்குச் சீடர்கள் சென்று நற்செய்தியைப் போதித்திருக்கலாமே. இயேசுவுக்கு முகாமைத்துவம் முறையாகத் தெரியவில்லையோ என்று இன்று நாம் முடிவெடுக்கலாம். தனித்துச் சாதிப்பதே தலை சிறந்தது என்று இன்றைய நிர்வாகப் பாடங்களும், வர்த்தக உலகமும் அடிக்கடி சொல்லி வருவதைக் கேட்டுப் பழகியதால் நாம் இவ்வாறு தான் சிந்திப்போம். நிர்வாகப் பாடங்களின் இறுதியில் தனி ஒருவரின் சாதனைகளே பெரிதுபடுத்தப்படுகின்றன. தனி மனிதத் துதியே முதலாளித்துவத்தின் அடிப்படை. தனி ஒருவர் சாதனைகளை அடைவதற்கு போட்டிகள், குறுக்கு வழிகள், அடுத்த வரைப் பயன்படுத்துதல் என்ற பல பாதகமானப் பாடங்களும் சொல்லித்தரப்படுகின்றன.

இறைவனின் பணி இதற்கு நேர்மாறானது. இருவராய்ச் செல்லும் போது, ஒருவர் மற்றொருவருக்கு உதவியாக இருக்கமுடியும். பல வேளைகளில் ஒருவர் மற்றொருவரின் மனச்சாட்சியாகச் செயற்படவும் முடியும். அருள் பணி நேரங்களில் போதனைகள் நிகழும், குணமளிக்கும் அரும் செயல்கள் நிகழும். மக்களிடம் பேரும் புகழும் பெருகும். இந்த நேரங்களில் ஒருவர் தனியாகச் செயற்பட்டால், அந்தப் போதனைகளும், அற்புதச்செயல்களும் ஏதோ தன் சொந்தசக்தியால் நிகழ்ந்ததைப்போல உணரும் வாய்ப்புக்கள் அதிகம் எழும். இருவராய் இப்பணிகளில் ஈடுபடும் போது, ஒருவர் தன்னையே வானளாவ உயர்த்திக் கொண்டால், அடுத்தவர் அவரைப் பத்திரமாக மீண்டும் தரைக்குக் கொண்டு வர முடியும். சுய நலத்தில் சிக்குண்டு சின்னா பின்னமாகியுள்ள நம் உலகிற்கு, இணைந்து செயற்படுவதாலேயே சாதிக்க முடியும் என்று இயேசு சொல்லித்தரும் இந்தப் பாடம் மிகவும் இன்று தேவையானதே.

இரண்டாவது பாடமாக கொள்ளலாம்: "இவ்விதம் அனுப்பப்பட்டவர்களுக்கு இயேசு அதிகாரம் அளித்தார்." எவ்வகை அதிகாரம்? இயேசுவின் சீடர்கள் மக்கள் மத்தியில் பணிபுரியச் செல்கின்றனர். அம்மக்கள் மீது அதிகாரம் செலுத்த இயேசு அவர்களை அனுப்பவில்லை. மாறாக, அம்மக்கள் மத்தியில் வளர்ந்திருந்த தீய சத்திகள் மீது அதிகாரம் அளித்தார். மக்களுக்காகப் பணிபுரிந்த இயேசு, அவர்களை அதிகாரம் செய்ய தன் பணியை பயன்படுத்தவில்லை, அவர்களைத் தீய சத்திகளிலிருந்து விடுதலை செய்யவே தன் அதிகாரத்தைப் பயன்படுத்தினார். அதே பாடத்தைத் தன் சீடர்களுக்கும் இயேசு சொல்லித் தந்தார். மக்கள் பணியில் ஈடுபடுகிறோம் என்று சொல்லி, மக்களின் நம்பிக்கையைப் பெறும் பலர், மக்களை அடக்கி, ஒடுக்கி நசுக்குவதற்குத் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், மக்கள் மத்தியில் வேரூன்றியிருக்கும் தீயசத்திகளை அடக்கி, ஒடுக்கி நசுக்குவதற்கு தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினால் இந்த மண்ணகம் விண்ணகமாக மாறியிருக்கும். அதிகாரம் என்ற பெயரில் மக்களை வதைக்கும் இன்றைய நம் தலைவர்கள் இயேசுவின் காலடிகளில் அமர்ந்து இந்த ஒரு பாடத்தையாவது பயில்வார்களா? நம்பிக்கையுடன் வேண்டிக்கொள்வோம்.

மூன்றாவது பாடமாக கொள்ளலாம்: "பணியாளர் வார்த்தைகளால் மட்டும் போதிப்பது பயனளிக்காது, அவரது வாழ்க்கையாலும் போதிக்க வேண்டும்." அருள்பணி, மக்கள் பணி என்ற ஆர்வத்தில் புறப்படும் எவரும் "இதைச் செய்ய வேண்டும்", "அதைச் செய்ய வேண்டும்" என்ற திட்டங்களுடன் மட்டும் கிளம்பினால், இந்த மூன்றாவது பாடத்தையும் வாழ்வாக்கும் போது தான் பணி அர்த்தம் பெறும். பணியாளர் வார்த்தைகளால் மட்டும் போதிப்பது பயனளிக்காது, அவரது வாழ்க்கையாலும் போதிக்க வேண்டும் என்பதை இயேசு இந்த வரிகளில் சொல்லித் தருகிறார். பணியாளரின் வாழ்வு மிக எளிதான வாழ்வாக இருக்க வேண்டும் என்பதை," பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக்காசு முதலிய வேறெதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். ஆனால் மிதியடி போட்டுக் கொள்ளலாம். அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்." என்ற இயேசுவின் வார்த்தைகள் தெளிவாக்குகின்றன. தேவையில்லாத சுமைகளை உள்ளத்தில் தாங்கி, பயணம் முழுவதும் பாடுபடவேண்டாம் என்று இயேசு சொல்வது எல்லோருக்கும் பொதுவான ஒரு நல்ல பாடம்.

**ம.பிரான்சிஸ்க் -**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

# இன்று ஒரு தகவல் 182



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கலவைக்கருவி

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வந்தார். வந்ததும் வராததுமா அவர் அவருடைய வீட்டுக்கார அம்மாவைப் பற்றி குறை சொல்ல ஆரம்பித்தார். அதையும் நேரடியாக குறிப்பிட்டு சொல்லுவதற்குப் பயம் போல இருக்கு. பொதுவாக இப்படி ஆரம்பித்தார்!

"இந்த காலத்திலே பெண்கள் எல்லாம் வீட்டு வேலைகளை சரியாக செய்வதில்லை..." என்றார்.

கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லுங்களேன் என்றேன்.

"பின்னே என்ன சார்... இப்ப தான் எல்லாவற்றுக்கும் இயந்திரம் வந்துவிட்டதே! அம்மிக்குப் பதிலாக இயந்திரம்... ஆட்டுக்கல்லுக்குப் பதிலாக இயந்திரம்... துணி துவைப்பதற்கு இயந்திரம். இப்படி எல்லாம் வந்துவிட்டதனாலே இவங்களுக்கெல்லாம் வேலை குறைந்து போய்விட்டது சார்..." என்றார்.

அதற்காக சந்தோஷப்படுங்கள் சார்... ஆத்திரப்படாதீர்கள் என்றேன்.

"உங்களுக்கு என்ன சார்... நீங்க பாட்டுக்கு சொல்லிவிட்டு போயிடுவீங்க... அவஸ்தைப் படுவது யார்? என்றார்.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டு இருக்கின்றபோது அவருடைய மனைவி தூரத்திலே வந்துகொண்டிருக்கிறது தெரிந்தது. அதை அவர் பார்த்து விட்டார்... உடனே மெதுவாக எழுந்து "சார்... என் மனைவி வாற மாதிரி தெரிகிறது... நான் இப்படியே இந்தப் பக்கமாக நழுவி விடுகிறேன் என்று கிளம்பினார். வந்தால் என்ன சார் சும்மா உட்காருங்கள் என்றேன்.

உங்களுக்கு விவரம் ஒன்றும் தெரியாது. நான் அப்புறமாக வந்து உங்களைப் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு கொல்லைப்பக்கமாக ஓடிப்போனர். கொஞ்ச நேரத்திலே அந்த அம்மா வந்தார். எனது கணவன் இங்கே வந்தாரா என்று விசாரித்தார். வந்து போய்விட்டார்.என்னம்மா விடயம் என்று கேட்டேன். வீட்டிலே மிக்ஸி ரிப்பேர் அதை எடுத்துக் கொண்டு போய் கடையிலே கொடுத்து சரி செய்து கொடுங்கள் என்று ஒரு மாசமாக சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இவர் காதிலே வாங்குவதில்லை என்று ஆரம்பித்தார்.

இந்த காலத்துப் பெண்கள் வீட்டு வேலைகளை சரியாக கவனிக்கிறது இல்லை என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தாரே. இவர் எவ்வளவு பொறுப்பாக மிக்ஸியை சரி செய்ய வேண்டும் என்கிறார். பொறுப்பில்லாமல் சுத்திக் கொண்டு இருக்கிறார் அவர்என்பதை புரிந்து கொண்டேன்.

சரி... அவர் மறுபடியும் இந்தப் பக்கம் வந்தால் நான் சொல்கிறேன் கவலைப்படாதீர்கள் என்றேன். மிக்ஸியை எப்படி பக்குவமாக உபயோகப்படுத்த வேண்டும் என்பதை கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொண்டால் நல்லது என்றேன். ஏன் இன்றைக்கு சொல்வதற்கு வேறு தகவலும் கிடைக்கவில்லையா? என்றார்கள். அதை நான் காதிலே வாங்காதது மாதிரி விபரத்தைச் சொல்ல ஆரம்பித்தேன்.

மிக்ஸி உபயோகத்திலே இல்லாத போது மின் இணைப்பிலே அது இருக்கக் கூடாது. பிளக்கை எடுத்து விட வேண்டும். மிக்ஸியை கழுவுகின்றபோதும் அப்படித்தான். இது மிகவும் முக்கியம். கழுவிக்கொண்டிருக்கும் போதே கை தவறுதலாக சுவிட்சில் பட்டு சுத்த ஆரம்பித்து விட்டால் என்ன ஆவது.

அரைக்கின்ற பிளேட் இருக்கிறதே அது எல்லாம் மிகவும் கூராக இருக்கும். அதனாலே அதையெல்லாம் கையிலே தேய்த்து சுத்தப்படுத்தக் கூடாது. தண்ணீர் குழாயை திறந்து விட்டு சுத்தப்படுத்த வேண்டும். சின்னப் பிள்ளைகளை எப்போதுமே மிக்ஸி பக்கத்திலே போக விடாதீர்கள். அது எல்லாம் சும்மா இருக்காது. எதையாவது தட்டி விடும்.

இன்னொரு விடயம் மிக்ஸி ஓடிக்கொண்டிருக்கிற போது T.V ஐ ஒன் செய்யாது இருப்பது நல்லது. மிக்ஸியை போதுமான உயரத்திலே வைக்க வேண்டும். அதை உபயோகப் படுத்துகின்ற போது அதனுடைய எல்லாப்பக்கங்களும் கண்ணிற்கு தெரிகின்ற மாதிரி இருக்க வேண்டும்.

மிகவும் பத்திரமான இடத்திலே வைத்துக் கொள்கின்றேன் என்று சொல்லிவிட்டு கட்டிலுக்கு அடியிலே மேசைக்கு அடியிலே அதைக் கொண்டு போய் வைக்காதீர்கள். அப்புறம் படுத்துக் கொண்டே அதை ஒப்பரேட் செய்ய வேண்டியிருக்கும். சூரியஒளி நேரடியாக மிக்ஸியிலே பட வேண்டாம்.

மிக்ஸியிலே மேல் மூடி இருக்கிறதே அதை மூடாமல் எப்போதும் இதை ஓட விடாதீர்கள். அதே மாதிரி எந்தப் பொருளையும் உள்ளே போடாமல் சும்மா சுத்த விட்டு வேடிக்கை பார்க்காதீர்கள். வேடிக்கை பார்ப்பதற்கு வீட்டிலே அதுதானா கிடைத்தது. அளவுக்கு மீறி அதிலே பொருட்களை திணித்து அதை ஓட விடுவதும் தப்பு.

தண்ணீர் சேர்க்காத பொருட்களை அரைக்கும் போது உராய்வு ஏற்படுவதனாலே ஜாடி கொஞ்சம் சூடாகும். அது இயற்கை தான். சூடாகிவிட்டதே என்று மோட்டருக்கு ஏதாவது ஆகிவிட்டதோ என்று நினைக்காதீர்கள். அப்புறம் எல்லாரும் செய்கின்ற ஒரு முக்கியமான தப்பு அதை நீங்களும் செய்யாதீர்கள்.

அதாவது மிக்ஸியை ஒரு பிளாஸ்டிக் சீட் இல்லை என்றால் துணி மீது வைக்காதீர்கள். ஏன் என்றால் மிக்ஸி ஓடிக் கொண்டிருக்கும் போது அந்த துணியை இழுத்தாலும் இழுக்கும். அப்படி இழுத்துக் கொண்டால் அடிப்பக்கம் காற்றோட்டத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்ற துவாரங்களை அது போய் அடைத்து விடும். இது மாதிரி சில விடயங்களிலே கொஞ்சம் கவனமாக இருந்து விட்டால் மிக்ஸி அடிக்கடி தொந்தரவு கொடுக்காது என்று தகவலை சொல்லி முடித்தேன். அந்த அம்மா ஒரு மாதிரியாக பார்த்துக் கொண்டே உட்காந்திருந்தார்.

என்னம்மா நான் சொன்னதையெல்லாம் காதிலே வாங்கிக்கொண்டீர்களா என்று கேட்டேன். நான் வாங்கி கொண்டேன் இருந்தாலும் வீட்டுக்குள்ளே தினசரி மிக்ஸியை உபயோகப்படுத்துபவர்களை வரச் சொல்கிறேன். அவர்கள் தெரிந்து கொள்வது தான் மிக முக்கியம் என்றார். ஓ உங்கள் வீட்டிலே சமையல் செய்கின்ற வேலைக்காரியை வரச் சொல்லுங்கள் விவரம் சொல்லி அனுப்புகிறேன் என்றேன். அதற்கு அந்த அம்மா நான் வரச் சொல்லுகிறேன் என்றது வேலைக்காரியை இல்லை வீட்டுக்காரரை என்றார். அந்த ஆள் ஏன் அவ்வளவு கொல்லைப்பக்கம் விழுந்தடிச்சு ஓடினார் என்ற விவரம் எனக்கு அப்போது புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் கட்டடம் இடிந்து விழுந்து

## ➤ 22 குழந்தைகள் உயிரிழப்பு ➤130 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

**(நைஜர்)**

**மத்திய நைஜீரியாவின் ஜோஸ் மாநிலத்தில் உள்ள செயின்ட் அக்கடமி பாடசாலையிலுள்ள கட்டடம் இடிந்து விழுந்ததால் 22 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன் 130 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.**



குறிப்பாக, இந்த பாடசாலையில் 1,000இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருவதாகவும், பல மாணவர்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டடம் இடிந்து விழுந்தமைக்கான காரணம் தெரியவராத போதிலும் குறித்த பகுதியில் மூன்று நாட்களாக தொடர் மழை பெய்துள்ளதாக பிரதேச வாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## ஐ.ம.ச யில் இருந்து நீக்கப்பட்டார் பொன்சேகா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா அந்தக் கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரி வித்தார்.

இதன்படி, பீல்ட் மார்சல் சரத் பொன் சேகாவை பாராளுமன்றக் குழுக் கூட்டம் உள்ளிட்ட கூட்டங்களுக்கு இணைத்துக் கொள்ளாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தொடர்பில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா முன்வைத்த விமர்சனங்கள் மற்றும் அவரது செயற்பாடு களைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவமானது எதிர்வரும் ஜூலை 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவங்கள் நடைபெற உள்ளன.

எதிர்வரும் ஒகஸ்ட் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் ஒகஸ்ட் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெற உள்ளன என தேவஸ்தான தர்மகர்த்தா க.வைத்திலிங்கச் செட்டியார் தெரிவித்துள்ளார். (நி)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிரான மனு திங்களன்று விசாரணைக்கு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்கக்கோரி சட்டத்தரணி அருண லக்சிறி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.

19 ஆம் திருத்தச் சட்டம் முறையாக பாராளுமன்றில் நிறைவேற்றப்படவில்லை என்றும் அது முறையாக நிறைவேற்றப் படுவதற்கு, பொதுசன வாக்கெடுப்பை நடத்த உத்தரவிடும்படியும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.மேலும் 19ஆம் திருத்தச் சட்டம் முறையாக நிறைவேற்றப்படும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறும் அந்த மனுவில் மனுதாரர் கோரி இருந்தார்.

இந்த மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை, பிரதம நீதியரசர் தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளது. (நி)

# 45 இலங்கை குற்றவாளிகள் வெளிநாடுகளில் தஞ்சம்

## கைது செய்யும் முயற்சி தீவிரம்

(கொழும்பு)

இன்டர்போலால் சிவப்பு பட்டியலிடப்பட்ட 45 இலங்கை குற்றவாளிகள் வெளிநாடுகளில் பெரும்பாலும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த தகவலை உயர்மட்ட பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், இவர்கள் இலங்கையில் சட்டவிரோதமான செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் வேளையில் பிடிபடுவதைத் தவிர்ப்பதற்காக ஆரம்பத்தில் டுபாயில் தஞ்சம் புகுந்து அங்கிருந்து தற்போது வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்ட நாடு கடத்தல் உடன்படிக்கைகளின் அடிப்படையில் அவர்களை பொறியில் சிக்க வைத்து இங்கு கொண்டு வருவதற்கான நடவடிக் கையை அரசாங்கம் ஆரம் பித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதனடிப்படையில், இலங்கை அதிகாரிகள், டுபாய் அதிகாரிகளுடன் இணைந்து, சிவப்பு அறிவிப் புகளின் அடிப்படையில் சில இலங்கைக் குற்றவாளிகளை கைது செய்து, பின்னர் இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளதோடு இலங் கையிலும் ஐந்து குற்றவாளி களை கைது செய்துள்ள னர்.

குறிப்பாக, நீதிமன்ற வழக்கில் இருந்து பிணை பெற்று நாட்டை விட்டு வெளியேறிய கஞ்சிபானி இம்ரான் இலங்கையில் குற்றச் செயல்களுக்கு சதித்திட்டம் தீட்டி வருவதாக கூறப்படுகின்றது.

மேலும் கஞ்சிபானி இம்ரான், டுபாயில் பதுங்கியிருக்கும் "லொகு பாட்டி" மற்றும் "கோணக் கோவிலே" சாந்த ஆகிய குற்றவாளிகளின் உதவியுடன் அத்துருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கித் தாக்குதலை நடத்தியதாக அண்மைய விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனாஸாக்களை தாமதமின்றி கையளிக்கக்கோரி கடிதம்

(கொழும்பு)

ஜனாஸாக்களை தாமதமின்றிக் கையளிக்கும் வகையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கு மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிரிழக்கும் முஸ்லிம்களுக்கான இறுதிச் சடங்கு நடவடிக்கைகளை சமய வழிமுறைக்கு அமைய, 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றுவதற்கு வசதியாக இந்த நியமனங்களை மேற்கொள்ளுமாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம் மக்களின் இறுதிச் சடங்குகள் ஏனைய மதச் சடங்குகளை போலன்றி 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் பல்வேறு காரணங்களினால் இதனை உரிய காலத்துக்குள் நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை இந்த மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது நல்லாட்சியின் நெறிமுறை பொறுப்புகளுக்கும் முரணானதாகும்.

எனவே, முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் மரபு ரீதியான கடமைகளை எளிதாக்கும் வகையில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முஸ்லிம் சமூகத்திலிருந்து மரண விசாரணை அதிகாரிகள் பலரை நியமிக்க பரிந்துரைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலையாக இருந்தாலும் அதன் பசியைப் போக்கிட புல் தேடி நடக்கின்றான். பசுவின் காதலன்

– *பிரியா செளந்தர்யா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாட்டுப் பண்ணைகளை உருவாக்கி வறுமையைப் போக்க உதவுங்கள்

அண்மையில் தமிழகத்தின் முக்கிய கூட்டமொன்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தின் நோக்கம் தமிழகம் முழுவதும் உற்பத்தி செய்யப்படும் பசும்பாலை ஆவின் பால் நிறுவனம் கொள்வனவு செய்வதாகும்.

ஆம், எம் அண்டைநாடான இந்தியாவில் செல்வந்தர்களாக இருப்பவர்களில் 90 சதவீதமானவர்கள் மாட்டுப் பண்ணை வைத்திருப்பவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தவிர, அங்கு பால்மா பைக்கற்றுக்களின் உபயோகம் மிக மிக அரிது.

மாறாக அங்கு இருக்கக்கூடிய மக்கள் ஆவின் பாலையே தமது உணவுத் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஆனால் எங்கள் மண்ணில் மாடு வளர்ப்பு – மாட்டுப் பண்ணை என்பன இன்னமும் உயர்வு பெறாமல் தாழ்ந்து கிடப்பது வேதனைக்குரியது.

ஆம், நம் வட மாகாணம் பசு வளர்ப்புக்கு உகந்த இடம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஒரு காலத்தில் நெடுந்தீவில் இருந்து தமிழகத்திலுள்ள இராமேஸ்வரம் சிவன் ஆலயத்துக்குப் பால் கொண்டு செல்லப்பட்டதான வரலாறு உண்டு.

அந்தளவுக்கு நெடுந்தீவில் பசு வளர்ப்பு உச்சம் தொட்டிருந்தது. அதனாலேயே நெடுந்தீவைப் பசுந்தீவு எனப் போற்றினோம்.

ஆனால் இன்று எங்கள் மண்ணில் பசு வளர்ப்பு வீழ்ச்சி கண்டுள்ளது.

அவ்வாறு சிலர் பசு வளர்ப்பில் ஈடுபட்டாலும் அவர்கள் ஏழ்மையில் வாழ்கின்றனர்.

அவர்களுக்கான ஊக்குவிப்புகள், கால்நடை வைத்தியசாலைகளின் சேவைகள் என்பன போதுமானதாக இல்லை.

சிலவேளைகளில் பசுக்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்குச் சிகிச்சை கிடைப்பதென்பது கடினமான காரியமாக உள்ளது.

இந்நிலையில் நோய்வாய்ப்பட்ட பசுக்கள் இறந்துபோக, அந்த ஏழைக் குடும்பத்தின் ஒரே முதலீடு மண் தோண்டிப் புதைக்கப்படுகிறது.

இவ்வாறு எங்கள் வட மாகாணத்தில் மாடு வளர்ப்பு குடும்ப வறுமை நிலையை மேலும் மோசமாக்கிவிட, மாடு வளர்ப்பது கௌரவக் குறைவு என்பது போல ஆகிவிட்டது.

என்ன செய்வது மாடு என்றாலே செல்வம் என்பது பொருள். ஆக, ஒரு காலத்தில் மாடுகள் எங்கள் உயர்ந்த செல்வமாக இருந்தன.

ஆனால் இன்று அந்த நிலைமை அற்றுப் போய்விட்டது.

உண்மையில் மாடு வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் வறுமையை ஒழிக்க முடியும். அதேநேரம் நிறை உணவாகிய பசும்பாலும் எம் மக்களுக்குத் தாராளமாகக் கிடைத்து அவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.

ஆகையால் தற்போது இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் பாகிஸ்தானிடமிருந்து நல்லினப் பசுக்களை கொள்வனவு செய்ய இருப்பதால், எங்கள் வட மாகாணத்துக்கும் குறித்த நல்லினப் பசுக்கள் கிடைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து பசு வளர்ப்பை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

# நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் எனில் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும்

## ஜே.வி.பி தலைவர் அநுர

இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார தெரிவித்தார்.

அநுரகுமார திசாநாயக்கவுக்கும் அம்பாறை மாவட்ட கரையோர வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் மாலை காரைதீவில் இடம்பெற்றது.

அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எங்களது நாடானது பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்ட வீழ்ச்சி அடைந்த நாடாக இருக்கின்றது.

வாங்கிய கடனை செலுத்த முடியாத ஒரு நாடாக நாங்கள் இருக்கிறோம். தொழில் வல்லுனர்களுக்கு இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும்.

ஆட்சியாளர்கள் ஏன் இனவாதத்தை கொண்டு வருகிறார்கள்? எங்கள் எல்லோருக்கும் தெரியும் அவர்களுக்கு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதவிடத்து, பிள்ளைகளுக்கு தொழில் ஒன்றை வழங்க முடியாதவிடத்து, மீனவ சமூகத்தினுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டால் அவர்கள் இனவாதத்தை கட்டவிழ்த்து விடுவார்கள். இந்த இனவாதத்தின் ஊடாக சிங்கள மக்களை மூளைச்சலவை செய்து சிங்கள மக்களுக்காக ஒரு அரசாங்கத்தை உருவாக்குவோம் என்று சொல்வார்கள்.

ஆகையினால் இந்த நாட்டை சிறப்பாக கட்டி எழுப்புவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை யாருக்கு உருவாக்கலாம். சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஒற்றுமை தேவை இல்லையா? தேசிய ஒற்றுமை தேவை இல்லையா? அதற்காகவே நாங்கள் முயற்சி செய்கிறோம். அது தேவை இல்லை என்றால் வேறு கட்சிகளை நீங்கள் தேர்ந்தெடுங்கள். வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறைய பேர் இங்கே இருக்கின்றீர்கள்.

நீங்கள் அனைவரும் மக்களை சந்திக்கிறீர்கள். கலந்துரையாடுகின்றீர்கள். நீங்கள் சொல்வதை மக்கள் கேட்பார்கள். இன்னும் இரண்டரை மாதங்கள் தான் இருக்கின்றது. எல்லோரும் சேர்ந்து கதைப்போம். தெற்கைப் போன்று கிழக்கு மாகாணத்திலும் மாற்றம் உருவாக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

(ம-7)

### கல்வியியற் கல்லூரியில் இணைத்துக்கொள்ளும்

## ஆசிரியர், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த எண்ணிக்கை 5,000இல் இருந்து 7,500 வரை உயரும் எனக் கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களாக மாற்றப்பட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதேவேளை, கல்வி சீர்திருத்தச் செயற்பாட்டுக் கமைய, கொரியா, ஜேர்மன், பிரான்ஸ், ஹிந்தி மற்றும் ஜப்பான் ஆகிய மொழிகளுக்கான ஆசிரியர்களைப் பாடசாலை கட்டமைப்புக்குள் இணைத்துக் கொள்வதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

(ம-7)

## ஜனாதிபதி வேட்பாளராக ரணில் போட்டியிட வேண்டும்

### பாராளுமன்றத்தில் தென்னக்கோன் அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளராக முன்னிலையாகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரமித பண்டார தென்னகோன்,

ரணில் விக்கிரமசிங்க மிகவும் குழப்பமான, மிகவும் கடினமான மற்றும் நெருக்கடியான நேரத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சவாலை ஏற்றுக் கொண்டார்.

சுதந்திர இலங்கையில், நாட்டை பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியில் பொறுப்பேற்றவர்கள் யாரும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்கும் முன்னரே அவரது வீடு எரிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகம் கையகப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம் என்பனவும் போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன.

பாராளுமன்றம் சுற்றிவளைக்கப்பட்டு, இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்திருந்த சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார்.

நாட்டைக் கைப்பற்றிய பின் படிப்படியாக அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய அவர், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி தேசியப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தினார். ஒடுக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து மக்களை விடுவிக்கவும் பாடுபட்டார். அவரால் மக்களைக் காப்பாற்ற முடிந்தது.

அதனால், எமது கௌரவமும் மதிப்பும் அவருக்கு உண்டு. ஜனாதிபதி தேர்தலுக்கு நாங்கள் தயாராக உள்ளோம். தேர்தல் ஆணைக்குழு தேர்தலை அறிவித்த பின்னர், எங்கள் வேட்பாளரை முன்னிறுத்துவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறும் பணிவுடன் அழைக்கின்றோம். இந்த நாடு மிகக் குறுகிய காலத்தில் கட்டியெழுப்பப்பட்டதுபோலவே, இந்த நாட்டை முழுமையாக கட்டியெழுப்ப அடுத்த சில வருடங்களுக்கு தேவையான பலத்தையும் தைரியத்தையும் அவருக்கு வழங்க நாமும் எம்மை அர்ப்பணிப்போம் என்றார்.

(ம-7)

### வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள்

## யாழில் எதிர்வரும் 16ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம்

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

குறித்த விடயத்தை வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கபில்டன் போல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப் போராட்டத்தின் நோக்கம் எமக்கான வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி எதிர்கால இளைய தலைமுறைகளும் எம்மைப் போல் அவலநிலையை எதிர்கொள்ளாமல் இருக்கும் வகையிலான கல்வி சீர்திருத்தை வலியுறுத்துவதையும் மையமாகக் கொண்டுள்ளது.

தற்போதைய தேர்தல் காலத்தில் எமக்கான பிரச்சினைகளை வெளிக்கொணர்வதன்மூலம் ஏதேனும் ஒரு வகையிலான சாதகமான வாய்ப்பினை நாம் பெற்றுக்கொள்ள முடியும். போராட்டங்கள் மூலம் மட்டுமே எங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது எமது நாட்டைப் பொறுத்தவரை நிதர்சனமான உண்மை. எனவே இதனை உணர்ந்து அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் ஒன்றிணைந்து தொழில் உரிமைக்கான ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு வலுச்சேர்க்கவும் என்றார்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடியகற்றும் பகுதிகளை பார்வையிட்ட அமெரிக்க அதிகாரிகள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பகாமம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க தூதரக அதிகாரிகள் பார்வையிட்டதுடன் வெடிபொருள் அகற்றலில் இருக்கின்ற நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் கிளிநொச்சியில் வைத்து கலந்துரையாடியுள்ளனர். (நி-315)

# நிரந்தர கிராம அலுவலர் வேண்டும் அக்கராயன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலர் நியமிப்பதற்கு கரைச்சி பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிக நீண்ட காலமாக அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலர் நியமிக்கப்படவில்லை. தற்போது பதில் கடமையில் உள்ள கிராம அலுவலரும் வாரத்தில் ஒரு தடவையே அக்கராயனுக்கு வருகை தந்து சில மணித்தியாலங்கள் பணியில் ஈடுபடுகிறார்.

கிளிநொச்சிமாவட்டத்தில்உப நகரமான அக்கராயனில் 700 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு என்பவற்றிலும் அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலர் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-350)

## தொழில் முனைவோர் கிராமம் அங்குராப்பணம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் முசலி பிரதேசத்தில் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம் இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தானினால் நேற்று சனிக்கிழமை காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய மற்றும் பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவின் கருத்திட்டத்திற்கு அமைவாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தொழில் முனை வோருக்கான விவசாய உபகரணங்கள், கால் நடை வளர்ப்புக்கான பொருட்கள் மற்றும் கோழிக் குஞ்சுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டதோடு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டது.


இந்நிகழ்வில் விவசாய திணைக்கள அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், கிராம சேவை யாளர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (நி-285)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 2024 ஆம் ஆண்டு முதலாம் தவணை முழுவதுமாக பாடசாலைக்கு 100 % வருகை தந்த மாணவர்கள் 32 பேர் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கற்றல் உதவித்திட்டமும் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: கிருஸ்ணகுமார்)



2028, 2032 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவனுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு கடந்தவாரம் கல்லூரியில் நடைபெற்றது. (படம்: கிருஸ்ணகுமார்)




கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை முதல்வர் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. (படம்: கிருஸ்ணகுமார்)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3168

Search for people, places and things

### கார்த்திகேயன்

பல அடுக்கு மாடி வீடுகளை கட்டிவிட்டு



ஓலை குடிசையின் ஒரு ஓரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது கை கரணை

### அக்ஷயன்



டிரைவருக்கும் கண்டக்டருக்கும்என்ன வித்தியாசம்?

கண்டக்டர் தூங்கிட்டா யாரும் டிக்கெட் வாங்க மாட்டாங்க.ஆனா, டிரைவர் தூங்கிட்டா எல்லோரும் டிக்கெட் வாங்கிடுவாங்க.

### கிஷாளினி




இது என்னடா புது புரளியா இருக்கு... எனக்கு படுத்த உடனே அந்த கனவு தானடா வருது

### டர்சிகா

திடீர்னு பூமி சுத்துறது நின்னுட்டா என்ன ஆகும்...?



நீ தான் நல்லா உருட்டுவியே... போயி உருட்டி விடு

### மயூரன்

என்ன மச்சான், இன்டர்வியூக்கு போனியே என்ன சொன்னாங்க?


வேலை கன்பார்ம் மச்சான்... இப்போ சேர்ந்ததும் 20,000 சம்பளம்... ஆறு மாதம்கழித்து 25,000 சம்பளமாம்

ஓ... வேலைக்கு சேர்ந்துட்டியா...?

எனக்கு என்ன பைத்தியமா...? ஆறு மாதம் கழித்துத் தான் போறேன் 25 ஆயிரம் கிடைக்கும்ல்ல




### டஜின்



When girls selecting a saree




மகாபாரதத்துல துட்சாதனன் கூட இவ்ளோ சேலையை உருவி போட்டிருக்க மாட்டான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 போத்தல்...

பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றினை பொலிஸார் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 10 போத்தல் கசிப்பினை பொலிஸார் மீட்டதுடன், கசிப்பினை விற்பனை செய்வதற்காகத் தயார்படுத்தி வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டில் இருந்த 47 வயதான பெண்ணையும் கைது செய்தனர். (ம-7,33)

## காணாமல்...

நாளான நேற்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறும், "எங்கே எங்கே உறவுகள் எங்கே", "கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே" என்று கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)



















## யாழில்...

தில்தாஸ் உள்ளிட்ட நட்சத்திரங்கள் குறித்த இசை நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் இசைநிகழ்வு இடம்பெற்ற வேளை நிகழ்வில் குழப்பம் விளைவித்ததாகத் தெரிவித்து ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## யாழில் சூரிய...

மின் இணைப்புப் பொறியியலாளர் காரியாலயத்தில் சூரியசக்தி இணைப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும்போது முறைகேடான விதத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதாகவும், மிக நீண்ட காலமாக விண்ணப்பித்தவர்களில் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும், இவை குறித்து மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு முறைப்பாடு செய்த வாடிக்கையாளர் ஒருவர் பழிவாங்கப்படுவதாகவும் ஜனாதிபதியின் குறைகேள் அதிகாரிக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்தே ஜனாதிபதியின் செயலாளரினால் குறித்த விடயம் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கையிடுமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. (ம-7,33)

## ஜனநாயகத்தை...

சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

நியூசிலாந்து பாராளுமன்றின் சபாநாயகர் ஜெரி ப்ரவுன்லி, எதிர்க்கட்சித் தலைவரை பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து ஆகிய இரண்டு நாடுகளுக்கிடையிலான நட்புறவைச் சிறந்த முறையில் பேணுவதற்குத் தாம் உறுதுணையாக இருப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான தமது திட்டம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து சபாநாயகரிடம் விளக்கமளித்துள்ளார்.

மக்களின் வாக்களிக்கும் உரிமையை இரத்துச் செய்து தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முனைவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனவே மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்குத் தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## 2 மனித...

இரண்டு மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் சைனட் குப்பி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின்போது நேற்றுடன் 47 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோம

தேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் ஒன்பதாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

இன்று விடுமுறை வழங்கப்பட்டு பத்தாம் நாள் அகழ்வாய்வுப் பணிகள் நாளை மீண்டும் தொடர இருக்கின்றது. (ம-7,299)

## வலுவான...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த முறைமை குறுகிய காலத்திற்கானதாக அன்றி நீண்ட காலத்திற்கு நாட்டின் பொருளாதாரம் சரிவடையாமல் பாதுகாக்கும் வகையில் வலுவாகக் கட்டமைக்கப்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். (ம-7)

## வைத்தியர்...

உள்ளன.

வைத்தியர் அர்ச்சுனா, வடக்கு சுகாதாரத் துறையில் காணப்பட்ட பல்வேறு ஊழல்களை வெளிப்படுத்தி இருந்த நிலையில், அதுகுறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

அத்துடன் நேற்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரை வைத்தியர் அர்ச்சுனா சந்தித்து பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதாகவும் அறிய முடிகிறது.

நாளை திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் முக்கிய அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் மக்கள் தமது பிரச்சினைகளை அவர்களிடத்தில் நேரடியாக எழுத்து மூலமாக தெரிவிக்க முடியும். (ம-7)

## ஜனா...

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நியமிப்பதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டது என்பது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரின் பெயர் இம்மாத இறுதியில் அறிவிக்கப்படும்.


பொதுஜன பெரமுனவின் கட்டமைப்பும் வியூகமும் ஜனாதிபதி வேட்பாளரை 4 முதல் 6 வாரங்களுக்குள் வெற்றிபெறச் செய்யும் அளவுக்குப் பலமாக உள்ளது.

பீதியடைந்து ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கமாட்டோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கு இணங்குகின்ற வேட்பாளரை இம்மாத இறுதியில் அறிவிக்க உள்ளோம். வேட்பாளரை நியமிப்பதில் நாம் அவசரப்படவில்லை.

பொதுஜன பெரமுனவின் கட்சிக் கட்டமைப்பு மிகவும் பலமாக உள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்ட 4 முதல் 6 வாரங்களுக்குள் வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய முடியும். எமது வேட்பாளர் ஏற்கெனவே அடிமட்ட ஒழுங்கமைப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 255/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)2Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அவல் | - 260/= | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1kg கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ |
| 180ml Chik சம்போ | - 360/= | ~~480/=~~ |
| 70g பேபி சோப் | - 110/= | ~~145/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 750g சுபோஷா சத்துமா | - 560/= | ~~590/=~~ |
| 500ml விம் Liquid | - 310/= | ~~375/=~~ |

Max 02
400g Anchor
1020/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(0160)

Happy Supermarket
0777 8080 30

## தென்னிந்திய தலயாத்திரை

**12 நாட்கள் | 35+ ஆலயங்கள்**

அறுபடை வீடுகள், நவக்கிரக கோவில்கள், பஞ்சபூத ஆலயங்கள், திருப்பதி உள்ளடங்கலாக இன்னும் பல ஆலயங்கள்

ரூபா. 285000.00

**ஆடி 26 பயணம்**

கட்டணத்தில் உள்ளடங்குபவை:

- Visa
- இருவழி விமானப் பயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட (A/C) வாகனம்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- மூன்று வேளை உணவு(சைவம்)
- நுழைவுக்கட்டணங்கள்
- தேநீர், குளிர்பானங்கள்
- மேலும் பல...

(1448)

**076 94 64 568**
**SRIBABY ENTERPRISES (PVT) LTD**
**1/1- 220, Stanley Road, Jaffna**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 73 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1475)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



(C-787)
**CIMS College**
49A, Chapel Street, Jaffna.
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Online Visa Appoinments
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
- Travel Insurance
- Travel Itinerary



(C-787)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

## விற்பனைக்கு

மாவிட்டபுரம் வீமன்காமம் அருகில் 36பரப்பு, 20 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு.

(0153)

தொடர்புகளுக்கு: விமல்
**077 734 8766**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் கோப்பாய் பிரதேசசெயலகம் அருகில் 3 ½ பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

(1428)

**077 570 8634**
0049 15784 7366 36 (Whatsapp)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378, 076 097 3127**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

(C-787)

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

## பயிற்சி நெறியுடன் கூடிய வேலைவாய்ப்பு

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்திற்கு (TALENTERS WORLD (PVT) LTD) பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(1447)

- ⇨ மேற்பார்வையாளர்
- ⇨ கணக்காளர்
- ⇨ வரவேற்பாளர்
- ⇨ களஞ்சியப்பொறுப்பாளர்
- ⇨ உதவிமுகாமையாளர்
- ⇨ முகாமையாளர்

| | |
|---|---|
| தகைமை | :- 10. O/L A/L. மேற்தகைமையுடையோர் |
| பயிற்சிக்காலம் | :- 3-6 மாதகாலம் |
| பயிற்சியின் போது | :- ரூ.25000 – ரூ.35000 (செலவுகளுக்கு) |
| பயிற்சியின் பின் | :- ரூ.75000 (நிரந்தரவருமானம்) |

தங்குமிடம் இலவசம்

தொடர்புகளுக்கு: (call) **075 298 6768, 076 726 3364, 077 071 4983**
(Whatsapp) **077 298 6763**

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

### எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமமானது பெற்றோர்களை இழந்த, பெற்றோரால் கைவிடப்பட்ட, கைவிடப்படும் ஆபத்தான நிலையிலுள்ள சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை வழங்கும் ஓர் சர்வதேச அரச, மத சார்பற்ற நிறுவனமாகும்.

**பதவி வெற்றிடங்கள்**

**சிறுவர் பராமரிப்பாளர் , குடும்பப் பராமரிப்பு உதவியாளர் (பெண்)**

- குடும்பப் பொறுப்புக்கள் அற்றவராக இருத்தல்
- தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவராக இருத்தல்
- 24- 45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்

**வழங்கப்படும் சலுகைகள்**

- தங்குமிட வசதி
- உணவு
- மருத்துவக் காப்புறுதி
- ஊக்கத்தொகை
- ஒய்வூதியம்- சிறுவர் பராமரிப்பாளருக்கானது
- EPF,ETF

(C-0785)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 22.07.2024 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரியுடன் அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**
எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்.
இல: 219, நாயன்மார்கட்டு.
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2211101, 0773733711
மின்னஞ்சல்: jaffna@soscvsrilanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191 ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.